# கிழக்கொளி



கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்க வெளியீடு.

*With Best Compliments From*

# Marliya's

***Bridal Paradise Silk & Sarees***

**No. 18, main Street, Batticaloa.**
**☎ - 065 - 22990**

*With Best Compliments From*

பெஷன் டிரேட் சென்டர்

# FASHION

**TRADE CENTRE**

*Dealers in fancy goods, Electrical goods,*
*T. V. Radio and Bicycles*

**No. 02, Bazaar Street,**
**Batticaloa.**

**T. P : 065 - 22781**
**Fax : 065 - 24200**

# கிழக்கொளி

**கலை, கலாசார காலாண்டுச் சஞ்சிகை**

ஒளி : 7 (2000 ஆடி - புரட்டாதி) கதிர் : 3

பிரதம ஆசிரியர் :
எஸ். எஸ். சூரியகாந்தன்

துணை ஆசிரியர் :
S. ராஜ்மோகன்

சஞ்சிகைக்குழு :
V. பிரகாஷ்
ப. ரமணீஸ்வரன்
K. சந்திரலிங்கம்
K. கதிர்காமத்தம்பி
G.A. மோசஸ்

விலை : ரூபா 20/-

தொடர்பு :
பிரதம ஆசிரியர்
கிழக்கொளி
விவசாய பீடம்
கிழக்கு பல்கலைக்கழகம்
வந்தாறுமூலை செங்கலடி.

01. இருபதாம் நூற்றாண்டு 03
02. நிர்பீடனமும் 07
03. ராஜ நாயகத்தில் 09
04. ஈழத்து இலக்கிய 12
05. இலங்கையில் சமஷ்டி 17
06. கச்சானே கச்சானே 21
07. தமிழை வளர்ப்பது 22
08. பெரியாரிலிந்து 24
09. படித்துச் சுவைத்த 26
10. இறக்குமதிச் சிரிப்பு 28
11. ஆளுநர் விருது 30
12. மந்திரச் சேவல்கள்... 33
13. குறுக் கழுத்துப் போட்டி 39

## எமது இதயத்திலிருந்து........

எமது வாசக நெஞ்சங்களுக்கு அன்பு வணக்கங்களை சிரம் தாழ்த்தி தெரிவித்துக்கொண்டு, கடந்த காலங்களில் உரிய நேரத்தில் வெளிவந்து கொண்டிருந்த "கிழக்கொளி" தற்போது சற்று காலந்தாழ்த்தி வெளிவருவதற்கு மன்னிப்பைக் கோரி, இனிமேல் உரிய காலத்தில் வெளியிட எனக்கு பூரண ஒத்துழைப்பை வழங்க சம்பந்தப்பட்டவர்கள் மனமிரங்கவேண்டுமென்க் கேட்டுக்கொள்கின்றேன்.

புதிய நிர்வாகக்குழு இம்முறை அங்கம் வகித்தாலும் "பழைய மொந்தையில் புதிய கள் தான். "இவ்விதழ் பல புதிய அம்சங்களைத் தாங்கி வந்து உங்கள் சிந்தனையைத் தூண்ட, அண்மையில் அமரத்துவமடைந்த காலாபூசணம் வையன் ஆனைக்குட்டி அவர்களின் ஆத்ம சாந்திக்காக அன்னாரது கட்டுரை ஒன்றையும் பிரசுரித்து "கிழக்கொளி" பெருமைபெறுகிறது. சினிமா நடிகர், நடிகை ஒருவர் மரணித்து விட்டால் நடக்கும் எடுபிடிகளுக்கு குறைவில்லை. மன்றங்கள் அஞ்சலிக் கூட்டங்கள் அன்னசாலைகள், ஏன் தீக்குளிப்புகள் கூட .... ஆனால் நம்மூர்க் கலைஞர் ஒருவர் பறை மேளக் கூத்துக் கலைஞராக இருப்பதால் அவரின் மறைவு சாதாரண மறைவாக நிர்ணயிக்கப்படுகிறது. உடன் மறக்கப்படுகிறது. கலைக்குள்ளும் இத்தனை பாகுபாடு என்பது தான் எமக்குள்ள பெரும் சந்தேகம். நம் [illegible]டுக்கலைகளையும் அது எந்த சமுகத்திலிந்து தோன்றுபவையயாக இருந்தாலும் சரி தமிழர்கள் புலம் பெயர்ந்தது மண்ணிலும் ஒலிக்க வைத்தல் அவரவர் கடடையாகும். அப்போதுதான். கலை, கலை என்ற உண்மையான வடிவத்தைப் பெறும் திருமண வீட்டிற்கு மேளம் தேடும் புலம்பெயர்ந்த தமிழன் மரண வீட்டிற்கு எதையுமே தேடுவதில்லை. அவன் தனது பாராம்பரியக்கலையை மதிக்க மறுக்கிறான்.

அமரர் கலாபூசனம் வையன் ஆனைக்குட்டியின் ஆத்ம சாந்திக்காக கிழக்கொளி பிரார்த்திக்கிறது.

**"கலைஞர்கள் என்றுமே சாவதில்லை"**

பிரதம ஆசிரியர்

# இருபதாம் நூற்றாண்டு முடிவில் ஈழத்துச் சிறுவர் இலக்கியம்

கலாநிதி. செ. யோகராசா

1

நவீன இலக்கிய முயற்சிகளுள் சிறுவர் இலக்கிய முயற்சி முக்கியமானதொன்று. அதேவேளையில் ஆய்வாளரும், படைப்பாளரும் முக்கியத்துவம் கொடுக்காத இலக்கியத்துறையுங்கூட, எனவே இருபதாம் நூற்றாண்டு ஈழத்துச் சிறுவர் இலக்கிய வளர்ச்சிபற்றிய மதிப்பீடு ஏனைய துறைசார்ந்த மதிப்பீடுளை விட அவசியமானதென்று கருதுகின்றேன். இத்தகைய மதிப்பீட்டினை, சிறுவர் பாடல், சிறுவர் கதை, சிறுவர் நெடுங்கதை, சிறுவர் நாடகம், சிறுவர் சஞ்சிகை என்ற அடிப்படையில் நிகழ்த்துவது பொருத்தமானது.

ஈழத்துச் சிறுவர் பாடல் முயற்சிபற்றி நோக்கும்போது முதலில் உவகையூட்டும் விடயமொன்று நினைவுக்குவருவது தவிர்க்க இயலாதது. தமிழில் முதல் சிறுவர் பாடல் தொகுப்பு (1918 இல்) ஈழத்தில் வெளிவந்தது என்பதே அதுவாகும் (க. வைத்தியநாதன் என்பவரால் வெளியிடப்பட்ட "பாலபோதினி" தொகுப்பு). எனினும் சென்ற நூற்றாண்டின் முப்பதுகளிலிருந்து சிறுவர் பாடல் எழுதமுற்பட்ட சோமசுந்தரப் புலவரையே ஈழத்துச் சிறுவர் பாடல் முன்னோடியாகக் கருதுவது வழக்கமாகும். எளிமையானதும் ஈழத்து மண்வாசனை கொண்டதுமான சிறுவர் பாடல்களை அவர் பாடியிருப்பனும் அவரது கணிசமான பாடல்களில் சிறுவர் உளவியலுக்கு ஒவ்வாத பண்புகள் இடம் பெற்றிருபபது இன்று பின்நோக்கிப் பார்க்கும்போது புலப்படுகின்றது.

பின்னர் நாற்பதுகளில் உருவான மறுமலர்ச்சிக் குழுவினரிடம் ஓரளவு கால்கொண்ட சிறுவர் பாடல் முயற்சி (எ-டு மஹாகவி, செ. கதிரேசர்பிள்ளை) ஒவ்வொரு காலப்பகுதியிலும் படிப்படியாக பரிணாமம் பெற்று எழுபதுகள் தொடக்கம் இன்றுவரை திருப்திதரும்விதத்தில் வளர்ச்சி எய்தி வருகின்றது.

சிறுவர் கதை முயற்சி ப்த்தொன்பதாம் நூற்றாண்டில் (எ-டு ஆறுமுகநாவலர்) தோற்றம் பெற்றாலும் தொடர்ச்சியான வளர்ச்சியைக் கொண்டிருக்கவில்லை. இருபதாம் நூற்றாண்டில் மறுமலர்ச்சிக் குழுவினரான பஞ்சாட்சரசர்மா குறிப்பிடத்தக்க சிறுவர் கதைகள் சிலவற்றை எழுதியிருந்தார். அக்காலம் தொடக்கம் இன்றுவரை ஈழத்துப் பத்திரிகைகள் பலவும் நூற்றுக்கணக்கான சிறுவர் கதைகளை வெளியிட்டு வரினும் அவற்றுள் பெரும்பாலானவை இதிகாசபுராணக் கதைகளின் அவதாரங்களாக உள்ளன. அல்லது அற்புத, மர்ம, மாயாஜால கதைகளாகச் சாகாவரம் பெற்று உலாவி வருகின்றன. இன்னொரு விதமாகக் கூறின், அறிவியல் சார்ந்த, பெரியார் வரலாறு முதலான துறைசார்ந்த சிறுவர் கதைகள் அரிதாகவே வெளிவந்துள்ளன.

சிறுவர் நெடுங்கதை முயற்சி (சென்ற நூற்றாண்டில்) அறுபதுகளளவிலேயே (க. நவசோதி எழுதிய "ஓடிப்போனவன்") இடம் பெறுகின்றது. எனினும், வெளிவரும் பெரும்பான படைப்புகள் மேலே சிறுவர் கதைகள்பற்றிக் கூறிய குறைபாடுகள் கொண்டனவாகவே காட்சிதருகின்றன. விதிவிலக்காக, என் சண்முகலிங்கன் ( சான்றோன் எனக்கேட்ட தாய்) அநு. வை நாகராஜன் (காட்டில் ஒரு வாரம்) செங்கை ஆழியான் (பூதத்தீவுப் புதிர்கள்) ஆகியோரது படைப்புகள் விதந்துரைக்கும்படியாகவுள்ளன. அண்மைக்கால எழுத்தாளருள் உ ,ளானந்தம், ஓ. கே. குணநாதன் ஆகியோர் கவனத்திற்குரிய படைப்புகளைத் தந்துள்ளனர்.

சிறுவர் நாடக முயற்சியின் ஆரம்பம் எண்பதுகளிலிருந்தே ஏற்படுகின்றது. குழந்தை ம. சண்முகலிங்கம் இவ்விதத்தில் முன்னோடியானவர். பின்னர் கவனிப்பிற்குரியோர் சி. மௌனகுரு தொடர்ந்து கோகிலா மகேந்திரன், ஜெயசங்கர், பாலசுகுமார், வெ. தவராஜா முதலான இளைய தலைமுறையினர் இத்துறையில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இத்துறையின் குறுகிய கால வளர்ச்சி ஓரளவு பிரமிப்பும் திருப்தியும் தருகின்றதாயினும் அண்மைக் காலமாகத் தேக்கநிலையொன்றினையே அவதானிக்க முடிகின்றது.

சிறுவர் இலக்கிய துறைசார்ந்த மேற்கூறிய துறைகள் அனைத்தையும் விட வளர்ச்சி நிலையில் மிகப் பின்தங்கியுள்ளது சிறுவர்

சஞ்சிகை முயற்சியாகும். வெற்றிமணி நட்சத்திரமாமா, மழலை என் செல்வம் என்று எப்போதாவது ஓரிருதடவை சிறுவர் சஞ்சிகைகள் என்ற குழந்தைகள் பிறந்து அற்பாயுளிலேயே மடிந்து விடுவது ஆர்வலர் பலருமறிந்த உண்மையாகும் (அண்மைக்காலத்தில் 'பிஞ்சு' என்ற சிறுவர் சஞ்சிகை வெளிவருகின்றது.) பதிலாக, தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் வேதாளன், முகமூடி, இந்திரஜால காமிக்ஸ் முதலியன சிறுவர்களின் பெருவிருப்பத்திற்குரிய சஞ்சிகைகளாக அதிகளவு விற்பனையாகிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்விடத்தில் சமீபகாலமாக சிறுவர் இலக்கிய வளர்ச்சி தொடர்பாக ஏற்பாட்டுள்ள இரு ஆரோக்கியமான மாற்றங்களை சுட்டிக் காட்டுவது அவசியமென்று கருதுகின்றேன்.

ஒன்று வடக்கு/கிழக்கு மாகாண கல்வி அமைச்சு பாடசாலை மாணவர்களுக்காக பாடசாலை சஞ்சிகைப் போட்டிகளை கடந்த மூன்றாண்டுகளாக நடத்திவருவது இவற்றினூடாக பாடசாலை மட்ட இளம் எழுத்தாளர் பலர் இனங்காணப்பட்டுள்ளனர்.

மற்றொன்று, புகலிட நா[illegible]களில் சிறுவர் நாடக முயற்சிகள் ஓரளவு அதிகரித்து வருவது (எ-[illegible] பாலேந்திராவின் செயற்பாடுகள்)

- 2 -

இதுவரை கூறியவற்றை மனங்கொண்டு ஈழத்துச் சிறுவர் இலக்கிய வளர்ச்சிநிலைபற்றி பின்வரும் விடயங்களைக் கூறமுடிகின்றது.

(அ) சிறுவர் பாடல், சிறுவர் கதை, சிறுவர் நெடுங்கதைகள் சிறுவர் நாடகம், சிறுவர் சஞ்சிகை ஆகிய துறைகளுள் சிறுவர் பாடல் துறை வளர்ச்சியே ஓரளவு திருப்தி தரும்படியாக உள்ளது

(ஆ) அறப் போதனைக்கு முதன்மையாளிக்கின்ற நிலைமையிலிருந்து பெரும்பாலான படைப்பாளர் நகரவில்லை.

(இ) மேற்கூறிய எத்துறை வளர்ச்சியும் சிறுவர் உளவியலுக்கு ஏற்ப வளர்ச்சி எய்தவில்லை.

(ஈ) அறிவியல், மருத்துவம், உலகளாவிய சமூகப் பிரச்சினைகள் (எ-டு) சூழலியல்) முதலான விடயங்கள் படைப்பாளரது கவனத்தைக் ஈர்க்கவில்லை.

(உ) படைப்புகள் நூலுருப்பெறும்போது அழகியல் அம்சங்கள் கவனிக்கப்படுவதில்லை.

- 3 -

மேற்கூறியவாறு ஈழத்துச் சிறுவர் இலக்கியத் துறையின் வளர்ச்சி மழலை நிலையில் காணப்படுவதற்கான காரணங்கள் யாவை? இவ்வித்தில் பின்வருவன கவனத்திற்குரியன:

அ) சிறுவரது அறிவு வளர்ச்சியிலும், ஆளுமை வளர்ச்சியிலும் அக்கறைகொள்ளாத (பண்பாட்டு வளர்ச்சியிலும் உத்தியோக நோக்கிலான கல்வி வளர்ச்சியிலும் அக்கறை கொள்கின்ற) தமிழ்ச் சமூகத்தின் மனோபாவம்

ஆ) சிறுவர் உளவியல் வளராத நிலை

இ) சிறுவர் இலக்கிய வளர்ச்சியில் உளப்பூர்வமாக அக்கறை கொள்ளாத எழுத்தாளரது மனோபாவம்.

ஈ) ஏனைய நூல்களைவிட, சிறுவர் இலக்கிய வெளியீடுகளுக்காக ஏற்படும் அதிக செலவு.

உ) தமிழ் நாட்டுச் சிறுவர் படைப்புகளின் இறக்குமதி

ஊ) அழகியல் அம்சங்கள் குன்றி வெளிவரும் சிறுவர் படைப்புகளின் கவர்ச்சியற்ற நிலை.

எ) சிறுவர் படைப்புகளின் குறைவான விற்பனை

ஏ) மேலைத்தேயச் சிறுவர் ஆக்கங்களுக்கு அறிமுகப் படாத நிலை

மேற்கூறிய விடயங்கள் ஈழத்து எழுத்தாளர், கல்வியாளர், பெற்றோர் அனைவரதும் ஆழ்ந்த கவனிப்பை அவாவி நிற்கின்றன. ஏனெனில் இன்றைய சிறுவர்கள்தாமே நாளைய எழுத்தாளர்கள்!

**பூச்சிகளும், வண்டுகளும் பிற உயிரினங்களுக்கு இரையாகாமல் இருக்க நாற்றத்தையும் உருசியற்ற உடலையும் கொண்டுள்ளன.**

## நீர்ப்பீடனமும் மனித உடல் பாதுகாப்பும் பொறிமுறையும்

# (Immunity & defence of human body)

**Chand Balasundaram**
**Dept. of Zoloogy**

மனித உடலானது பலவிதமான எதிர்ப்பு பொறிமுறைகளை தம்முடலில் தாங்கியிருப்பதனால், உடல் எதிரிகளான பற்றீரியா, வைரசு, பங்கசு மற்றும் ஒட்டுண்ணி என்பனவற்றின் தாக்குதல்களிலிருந்து பாதுகாக்கப்படுகின்றது. உடலுக்கு தீங்கு விளைவிக்கும் உடல் எதிரிகள் உடலினுள் பல வழிகளில் உட்செலுத்தப்படுகிறது. உதாரணமாக வாய், மூக்கு, காயங்களினூடாக உட்புகுத்தப்படுகின்றன. உடல் எதிர்ப்பை உயிர்ப்பான உயிர்ப்பற்ற என இரண்டு வகையாகப் பிரிக்கலாம் உயிர்ப்பற்ற (PASSIVE) என்பது உட்புகுத்தப்படும் உடல் எதிரிகளை தடுக்கின்ற பொறிமுறையும், அமைப்புகளும் உடலில் அமைந்திருந்து அவற்றினால் நடாத்தப்படும் செயல் ஆகும்..

உயிர்ப்பான (ACTIVE) என்பது உடல் எதிரியானது உடலினுள் உட்புகுத்தப்பட்டவுடன் உடலின் பாதுகாப்புக் கலன்கள் அல்லது பிற பொருள் எதிரி அமைப்புக்களினால் உடல் எதிரிக்கு எதிராக நடாத்தப்படும் போராட்டமாகும். போரில் சில சமயங்களில் உடல் எதிரியும் வெற்றி பெற்று நோயை உருவாக்கும்

**உடல் எதிரிகளின் உட்புகுதலைத் தடுத்தல்**
(PREVENTING ENTRY OF ANTIGENS)

முற்குறிப்பிட்டவாறு உயிர்ப்பற்ற முறையான தொழிற்பாட்டில் முதலாவதாக தோலில் காணப்படும் கெரற்றின் (KERALINIZED) படையானது உட்புகும் உடல் எதிரிகளைத்தடுக்கும் பாதுகாப்பான படையாகும். மற்றும் உணவுக்கால்வாயும் மூச்சுக்குழல்வாயும் உடல் எதிரிகள் உட்புகுதலின் வழிகளாக அமைகின்றன. எவ்வாறாயினும் மூச்சுக்குழல்வாயில் காணப்படும் பிசிர்களும் சீதமும் உடல் எதிரிகள் உட்புகுதலை தடுத்து நிறுத்தும் அமைப்புக்களாக உள்ளன. உணவுக் கால்வாயில் வயிற்றில் சுரக்கும் அமிலத்தினால் உடல் எதிரிகள் அழிக்கப்படுகின்றன. மற்றும் தும்முதல், இருமுதல் வாந்தியெடுத்தல் மூலம் உடல் எதிரிகள் உடலிலிருந்து அகற்றப்படுகின்றன. உடலில்

காணப்படும். காயங்கள் அதனூடாக உட்புகுத்தப்படும் உடல் எதிரிகளினால் தொற்றுதலை உருவாக்கும் முக்கிய வழியாக அமைகின்றது. இவ்வாறான செலுத்துகை குருதி உறைவதன் மூலமும், காயங்கள் விரைவாக சுகப்படுவதன் மூலமும் குறைக்கப்படுகின்றன.

## மனிதனில் உயிர்ப்பற்ற கட்டமைப்பு.




Fig 2.33 Morphology of the neutrophil. [illegible]

நடுநிலை நாடி குருதிக்கலங்களுடன்

**லை சோசைம் (LYSOZYME)** என்ற நொதியமானது கண்ணீர். மூக்குநீர், உமிழ்நீர் போன்றவற்றில் காணப்படுகிறது. இந்நொதியம் gram (+) ve பற்றீரியாக்களை அழிக்கவல்லது. சில gram (-)ve பற்றீரியாக்களையும் அழிக்கின்றது. மற்றும் பொது சுகாதாரமும் துப்பரவும் நுண்ணுயிர் கொல்லிகள் பாவித்தலும் கிருமியழிக்கப்பட்ட வைத்தியமுறைகளும் உடல் எதிரி தொற்றுதலை தடுக்கமுடியும்.

இவ்வாறான உயிர்ப்பற்ற பொறிமுறையினூடான போராட்டத்தில் வெற்றிகண்டு உடலினுட்புகும் உடல் எதிரிகள் இருவிதமான எதிர்ப்பு பொறிமுறைகளுக்கு உட்படுத்தப்படுகின்றன. இவ்விரு பொறிமுறையும் பிள்ளைப்பராய உடலில் நன்கு தொழிற்படும் உடன் பிறந்த குழந்தைகளில் உடல் எதிரிகளை வெற்றி கொள்வதற்கு குருதி திரவிழையத்தில் கரைந்திருக்கின்ற புரதங்களின் தாக்கம் காரணமாகும் இவை அவற்றை தாக்கி அழிக்கும் வல்லமையுடையன. வளர்ந்த மனித உடலில் பெரும் தின்னிமுறையில் அழித்தலுடன் உடல் எதிரிகள் உள்வாங்கப்பட்டு அவைகளின் கடுமையான தாக்குதலுக்கு பிறபொருள் எதிரிகள் உட்படுத்தப்படுகின்றது.

(தொடரும்.................)

# இராஜ நாயகத்தில் முகமது நபியின் சிறப்பு

-அழகுகிருபா-

இஸ்லாமிய சமயச்சார்பான தமிழ் இலக்கியங்களிலே உமறுப் புலவர் சீறாப் புராணத்திற்கு அடுத்து சிறப்பு பெறும் தமிழ் நூல் "இராஜ நாயகம்" எனலாம். இந்நூலை இயற்றியவர் கி. பி. 18ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 19ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் தமிழ் நாட்டிலே வாழ்ந்த மதுரை மீசல் வண்ணக் களஞ்சியப் புலவர் (இயற் பெயர் - முகம்மது இபுறாகிம்) ஆவார். தமிழிலே பல வகை வண்ணங்கள் பாடுவதிலே வல்லவராய் இவர் விளங்கியதால் அவருக்கு வண்ணக் களஞ்சியப் புலவர் எனும் சிறப்புப் பெயர் வழங்கலாயிற்று என அறிய முடிகிறது.

வண்ணக் களஞ்சியப் புலவர் அரசர்க்கெல்லாம் அரசர் எனக் கொள்ளப்படும் இராஜ நாயகமாய் திகழ்ந்த சுலைமான் நபி (அலை) அவர்களை பாட்டுடை தலைவராகக் கொண்டு பாடிய இராஜநாயகத்தில் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் புகழையும் இறை தூதர் எனக் கொள்ளப்படும் நபிமாரில் இறுதி நபி எனக் கொள்ளப்படுபவராகிய முகம்மது நபி அவர்களின் சிறப்பையம் இராஜ நாயகத்தில் இடம் பெறும் இருபதாம் படலமாகிய "ஹ.். பத்துல்லாவில் குறுபான் கொடுத்த படலம்" என்ற பிரிவினூடாக எடுத்துக் காட்டியுள்ளார்.

இஸ்லாமிய மார்க்கப் போதனைகளையும் புனித திருக்குர் ஆன் கூறும் வழிகளையும் இஸ்லாத்தில் கட்டாயக் கடமைகள் எனக் குறிப்பிடப்பட்டுள்ள ஈமான், தொழுகை, எ காத், நோன்பு, ஹஜ் என்பனவற்றை நிறைவேற்றுவதற்கான வழ ளையும் மந்திரமான கலிமா ஓதுவதன் அவசியத்தையும் குறித்த படலத்தினூடாக கூற விளைந்துள்ளதோடு இவை அனைத்தையும் வாழ்வில் கடைப்படித்தற்கு நற்போதகராக விளங்கும் காரண புருஷரான முகம்மது நபி அவர்களின் பெருமைகளை இப்படலத்தில் பல கோணங்களில் நின்று கூறியுள்ளார்.

உலகத்தில் மத்திமமாக விளங்கும் ஹ.்.பாவிலேயே முகம்மது நபி அவர்களின் அவதாரம் நிகழும் என எல்லாப் புகழும் கொண்ட அல்லாஹ் முன்னொரு நாளில் திருவாய் மலர்ந்தருளியதை இப்படலத்தில் குறிப்பிட்டுக் காட்டும் புலவர் வல்லோனான இறைவனின் அருளினாலேயே பொறுமை வாய்ந்த எல்லா நபிமாருக்கும் தலைவராகவும் உயர்ந்த நல்ல பொருள்கள் அனைத்தினதும் உட்பொருளாகவும் விளங்குகின்ற முகம்மது நபி அவதாரம் செய்தார் என்பதைக் கூறி முகம்மது நபியின் சிறப்பை எடுத்துக் காட்டியுள்ளார். முகம்மது நபி அவர்கள் திருமறையான திருக்குர்ஆன் வசனங்களை போற்றிப் பாதுகாத்தாரெனவும் இஸ்லாமியரை புனித ஹ.்.பா மீது நம்பிக்கை கொள்ளச்செய்வார் எனவும் எடுத்துரைத் துள்ளதோடு

"குற்றமற்று உயரும் குறை ஷியன் குலத்தின்
கொழுந்தது வாய் வேத காரணராய்
வெற்றியும் விருதும் மிகப் பெறுபவராய்
விண்ணவிர் புகழ் மணி விளக்காய்
நற்றவ நபிகள் எவர்க்கும் நாயகமாய்"

முகம்மது நபியவர்கள் விளங்குவார் என்று கூறுவதிலிருந்து அவருடைய இயல்பு பிறப்பு தன்மை புலனாகிறது.

முகம்மது நபி அவர்கள் அல்லாஹ்வின் மலர்ப்பாதங்களை வணங்காத பகைவர்களை வாளால் அழித்தாரெனவும் இவ்வுலகை ஒரு குடைக்குக் கீழ்காப்பாரெனவும் மெய்ப்பொருளாக விளங்கும் அல்லாஹ்வினை பழிப்பவரினை அழித்தொழிக்க பிசபீன் எனும் மார்க்கப் போரினை நிகழ்த்துவாரெனவும் கூறுவதிலிருந்து முகம்மது நபி அவர்களின் சிறப்பு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

முகம்மது நபி அவர்களின் சிறப்புக்களை மேலும் எடுத்துக்காட்ட முனைந்த வண்ணக் களஞ்சியப் புலவர் மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் பொறிகளால் நபி அவர்களை அனுபவித்து அறிதலே பொறிகளைப் பெற்றதன் பயன் என்றும், மாறாக அப்பொறிகளால் முகம்மது நபி அவர்களை அனுபவிக்காத வரையில் அவை பொறிகளாக மாட்டாது என்ற கருத்தை தொக்க வைத்து முகம்மது நபி அவர்களின் சிறப்பை எடுத்துக் காட்டியுள்ளார்.

அருள் வல்லவராகவும், வேத காரணராகவும், அதன் பொருள் போன்றவராகவும் மறுவற்று ஒளிரும் சந்திரனைப் போன்றவராகவும் தேன் சிந்தும் குங்கும மரத்தின் மலர் மாலையணிந்த தோள்களை யுடையவராகவும் கருணை எனும் பாற்கடலிலே தோன்றிய தெளிந்த அமுதம் போன்றவருமான முகம்மது நபி (ஸல்) அவர்களை காணும் பாக்கியம் பெற்ற கண்களே உண்மையான கண்களாம் (ஏனையவை கண்கள் அல்ல). என்பதை "கள்ள விழ் மரவ மலரத்தொடைப் புயரைக் கருணையங் கடலினிற் பிறந்த தேனமுது அனைய முகம்மது நபியைத் தெரிசிக்கும் கண்களே கண்கள்" எனவரும் செய்யுள் வரிகளிலிருந்து. அறிய முடிகின்றது.

முகம்மது நபி அவர்களின் சிறப்பை இன்னொரு வகையில் கூறும் புலவர் அவர் இரு விழிகளிலும் உள்ள கண்மணி போனறவரும், மகளான பாத்திமா நாயகி வீரத்திலும் புலி போன்றவரான அலி (றழி) அவர்களுக்கு மணம் செய்து கொடுத்து அவர்கள் பெற்ற இரு புதல்வர்களான ஹசன், ஹுசை என்போரை தொட்டு மகிழ்பவர் என்றும் அத்தகைய புகழ் படைத்த முகம்மது நபி அவர்களின் வழிகாட்டலில் இஸ்லாமியர்கள் அடையும் பயனையும் கூறி நபி அவர்களின் சிறப்பையும் விளக்கியுள்ளார்.

## கிழக்கொளி செய்திகள்

கீழ்க்காணும் பதவிகளுக்கு பதவி உயர்வு பெற்ற ஊழியர்களை கிழக்கொளி வாழ்த்துகிறது.

| | |
|---|---|
| 01. காசாளராக | திரு. T. ஸ்ரீதரன் |
| 02. லிகிதர்களாக | திரு. K. தேவராஜா<br>திரு. M. மகேந்திரன் |
| 03. தொழிநுட்ப உத்தியோகத்தராக | - திரு. S. கிருஷ்ணகுமார் |
| 04. ஆய்வுகூட கண்காணிப்பாளர்களாக | திரு. S. [illegible]குமார்<br>திரு. S. தயாநிதி |
| 05. சாரதியாக | - திரு. S. அரசரட்ணம் |

### திருமலை வளாகத்தில்

| | |
|---|---|
| 01. கணக்குப்பதிவாளராக | - திருமதி. S. தெட்சணாமூர்த்தி |
| 02. நூலக உதவியாளராக. | - திருமதி. K. பத்மராஜ் |

# எழுத்து இலக்கிய உலகில் முன்னோடி பேராசிரியர் க. கைலாசபதி

பெ. பேரின்பராசா

தமிழ் இலக்கிய ஆய்வு முறைகளில் தமக்கென புதிய பாணியொன்றை வளர்த்த பெருமை பேராசிரியர் க. கைலாசபதி அவர்களையே சாரும். தாம் வாழ்ந்த சூழலுக்கும், தமது கல்விப்புலத்திற்கும் உரியதாக தனது சிந்தனைத்தளத்தை உருவாக்கிக் கொண்டவர். தம்காலத்து இளைய எழுத்தாளர்களிடையே முற்போக்கான சிந்தனைகளை உருவாக்குதல் மட்டுமன்றி அவர்களது எழுத்துத்துறையிலும் இவருடைய சிந்தனைத்துளிகள் சுவறிக் காணப்பட்டன. பேராசிரியர் அவர்களது இலக்கியக் களத்தில் புதிய எழுத்தாளர்கள் பலர் ஈர்க்கப்பட்டனர். இதனால் இலங்கை, தமிழக எழுத்திலக்கிய வளர்ச்சிப்பாதையில் புதிய வடிவமைப்புக்கள் தோன்றக் காரணமாக விளங்கினார்.

பேராசிரியர் அவர்களின் எழுத்திலக்கிய முயற்சிகளுக்கு அன்னாருக்கு வாய்த்த இலக்கியச் பயிற்சிக்களமே காரணமாகும் பல்கலைக்கழகத்தில் மாணவனாக படித்துக் கொண்டிருந்தபோது எழுத்தாக்க முயற்சிகளில் ஈடுபாடு பெற்றிருந்தார். பல்கலைக் கழகக் கல்வியை தொடர்ந்து 1950களில் தினகரன் வாரப்பத்திரிகைப் பிரிவின் பிரதம ஆசிரியராகப் பணியாற்றினார். அங்கு பேராசிரியரின் எழுத்திலக்கிய முயற்சிகள் மேலும் பெருகிக்காணப்பட்டன. அதேகாலத்தில் இலங்கையின் தமிழ் தேசிய சிந்தனையும். தேசிய உணர்வுகள் கலை இலக்கியத்துறைகளிலும் செல்வாக்கு பெறத் தொடங்கின. தமிழ்ச் சமூகம், தமிழ் சமூகவரலாறுகள், தமிழர் கலை, தமிழர் பண்பாடுகள் பற்றி ஆழமாகவும் ஒப்பீட்டுரீதியாகவும் சிந்திக்கும் நிலை ஏற்பட்டது. அதுவே அப்போதைய எழுத்திலக்கியப் பயிற்சியாகவும் மாறியது.

சமூதாய விருப்புகளுக்கு ஏற்றவாறு சமூக நிறுவனங்கள் உருவாக்கப்படுவதும் இயல்பானதே. பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக கடமையாற்றும் போது பேராசிரியர் க. கைலாசபதி அவர்கள் மார்க்சீசிய விமர்சகராகவம் எழுத்தாளராகவுமே விளங்கினார். அக்காலத்தில் இலக்கிய போக்குகளிலும் ஆக்கங்களிலும் புதிய மாற்றங்களைப் பாய்ச்சும் விசையாக தொழிற்பட்ட நிறுவனமே இலங்கை

முற்போக்கு எழுத்தாளர் சங்கம் பத்திரிகைத்துறை சார்ந்தோர்களை விட புதிய ஆக்க இலக்கியக்காரர்களை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் உருவாக்கியது. அவர்களது எழுத்தாக்கங்களுக்கு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தொழிற்பாட்டுடன் கைலாசபதி அவர்களது ஆலோசனைகளும், ஆய்வுகளும் தூண்டுதலாக அமைந்தன.

பத்திரிகைப் பணி பல்கலைக்கழக கல்விப்புலத்தில் தமிழ் வரலாறு முதலியவற்றில் புலமை பெற்றமை முற்போக்கு எழுத்தாளர் சங்க தொடர்புகள் ஆகியவற்றின் காரணமாக க. கைலாசபதி அவர்களின் எழுத்திலக்கிய முயற்சிகள் மேலும் முனைப்பு பெற்றன. அத்தோடு மேலும் பல காரணிகளும் பேராசிரியரின் எழுத்துலக வேகத்திற்கு உந்துசக்தியாக இருந்ததெனலாம். அக்காலகட்டத்தில் தமிழ் நாட்டிலும் இந்திய தேசிய உணர்வு மிக ஆழமாக வேரூன்றிப் பரவியிருந்தது. மேலைத் தேய விமர்சனமுறைகள் தமிழ் இலக்கிய விமர்சனமுறைகளுடன் இணைய ஆரம்பித்தன. தமிழ் நாட்டில் ஏற்பட்ட தேசிய உணர்வு பத்திரிகைகள், சஞ்சிகைகள் தோன்ற வாய்ப்பாகியது. அதுபோலவே பேராசிரியருடைய மார்க்சீசிய பார்வையுடன் கூடிய எழுத்துக்களால் இலங்கையிலும் நூல வெளியீடுகள், சஞ்சிகைகள், பத்திரிகைக் கட்டுரைகள் வெளிவரத் தொடங்கியிருந்தன. இவற்றிற்கான முன்னோடியாகவும் பேராசிரியரையே குறிப்பிடமுடியும்.

பேராசிரியர் க. கைலாசபதி அவர்களின் விமர்சன முறை சமூக இயக்க முறைமையை வெளிப்படுத்துவதாகும். இத்தகைய சமூக இயங்கியல் விமர்சன முறையை அழகியல் கலைத்துவ நெறியாளர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் பேராசிரியரின் கலை இலக்கிய விமர்சனங்களில் அழகியல் அணுகுமுறை குறைவாகவே உள்ளமையை சுட்டிக்காட்டினர். 1980 களில் பேராசிரியர் மல்லிகையில் எழுதிய கவிதையும் தத்துவமும் "என்னும் கட்டுரையில் அழகியல் விமர்சனமுறையை காரசாரமாகக் கண்டித்திருந்தார். இக்கருத்துக்களுக்கு அழகியல் விமர்சனகாரர்களால் மாற்றுக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. பேராசிரியரின் எழுத்திலக்கியப் போக்கில் மார்க்சீசிய அணுகுமுறை இருந்தமையாலேயே அழகியல் அணுகுமுறை கண்டிக்கப்பட்டது எனலாம். சமூக இயக்கம், சமூக இயங்கியல் நெறி என்பனவே பேராசிரியரின் எழுத்துக்களின் அடிநாதமாக விளங்கின.

மேலைத்தேய அறிவியல் துறை வளர்சிகளில் காரணகாரிய அணுகுமுறை, அறிவாராய்ச்சிக்கோட்பாடு, அறிவுவாத வளர்ச்சி என்பன வேகமாக பரவியிருந்தன. அறிவுவாத சிந்தனையை இலக்கிய ஆய்விலும் பிரயோகித்து பிரயோக இலக்கியப் பார்வையை பேராசிரியர் தமது எழுத்துக்களில் வெளிப்படுத்தினார். தமிழ் இலக்கியத்திற்கான காரணகாரிய அறிவைப் பயன்படுத்தி மேற்கொண்ட விமர்சன நெறியாலேயே ஒப்பியல் இலக்கிய அணுகுமுறையும் வளர்க்கப்பட்டது. இலக்கிய ஆக்கங்களுக்கான காரணகாரிய ஆய்வுமுறை இலக்கியப்படைப்புக்களின் சமூக அசைவுளை வெளிக்காட்டுகின்றன. பேராசிரியரின் சர்வ தேசிய இலக்கியப் பரிச்சயம் அவரது எழுத்திலக்கிய ஆய்விற்கு மேலும் ஆர்வம் கொடுத்ததெனலாம். பேராசிரியர் க. கைலாசபதி இலக்கியக் கல்விசார் ஆய்வாளராகவும். தொழிசார்புலமை பெற்றவராகவும் இருந்தமை இலக்கியத்தினூடாக உலகப் பொது மையை ஏற்படுத்தும் முயற்சிகளை தோற்றுவித்தது. இணைப்புக் கணனி போன்ற தொடர்பு சாதனம் மூலம் இன்று உலக பொதுமை ஏற்பட: இலக்கிய கருத்துக்களினூடாக பேராசிரியர் உலகப் பொதுமையை ஏற்படுத்தியிருந்தார். ஒப்பியல் இலக்கிய முறை இலக்கிய கருத்தடக்கம் அதன் காரணம் என்பவற்றை அறியவும், இலக்கிய கர்த்தாவுக்கும் அவர் வாழும் சூழலுக்கும் இடையிலான தொடர்பை அறியவும் காரணமாயிற்று. இத்தகைய புதிய ஆய்வுமுறை பேராசிரியரின் எழுத்திலக்கிய முயற்சிகளுக்கு மேலும் தூண்டுதலாக இருந்தன.

பேராசிரியரின் இலக்கிய ஆய்வு மரபுரீதியான ஆய்வுமுறைகளில் இருந்து வேறுபட்டது. என்பதை தாம் எழுதிய கட்டுரைகள் முன்னுரைகளில் வெளிக்காட்டியுள்ளார். கோ. கேசவனின் "மண்ணும் மனித உறவுகளும் "என்னும் நூலிற்கு பேராசிரியர் எழுதிய நீண்ட முன்னுரையில் மதச்சார்பு, பௌராணிக மரபு என்பவற்றிலிருந்து இலக்கியக் கோட்பாடு வேறுபட்டுச் செல்வதைக் குறிப்பிட்டுள்ளார். பேராசிரியருக்கு பழந்தமிழ் இலக்கியங்களில் இருந்த பரிச்சயம் இவ்வாறான சிந்தனைகளுக்கு காரணமாயிற்று. பழந்தமிழ் நூல்களின் கருத்துக்களில் ஆழப்பார்வையை செலுத்தியமையாலேயே பதிய எழுத்திலக்கிய முயற்சிகளுக்கு வித்திட்டார் எனக் குறிப்பிடலாம்

பத்திரிகைத்துறை, பல்கலைக்கழக கல்விப்புலமை, தேசிய

உணர்வின் அவசியம் எழுத்தாளர் கழகம், தமிழக தொடர்புகள் ஆகிய வற்றினூடாக மார்க்சீசிய அணுகுமுறையை வளர்த்துக் கொண்ட எழுத்திலக்கிய பிதா பேராசிரியர் க. கைலாசபதியவர்கள். இலக்கிய விமர்சனமுறை இருபிரதான கருத்துக்களைச் சுட்டிக்காட்டுவதாகும்.

1. மரபுவழி இலக்கிய விமர்சனம்
2. மார்க்சீசிய வழி இலக்கிய விமர்சனம்.

என்பவையாம் மரபுவழித் திறனாய்வு முறையில் சி. சு. செல்லப்பா முக்கியமானவர். இவர் இலக்கிய அமைப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்தார். க. நா. சுப்பிரமணியம் கலை அழகியல் முறைக்கு முக்கியத்துவம் கொடுக்கவிரும்பினார். இந்த இருநிலைகளையும் தாண்டி மார்க்சீசிய விமர்சன எழுத்துக்களுக்கு பேராசிரியர் முக்கியத்துவம் கொடுத்தார்.

தமிழவன் எழுதிய "அமைப்பியல் வாதமும் தமிழ் இலக்கியமும்" என்னும் நூலில் பேராசிரியர் க. கைலாசபதி அவர்கள் எழுத்திலக்கிய முயற்சிகள் பற்றி பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. அந்நூலில்,

"மேற்கத் தேய மார்க்சீசிய அணுகுறை இன்று தமக்குள்ளேயே பலவித அடிப்படை வேற்றுமைகளைக் கொண்டுள்ளது. இவ்வாறான வேறுபாடுகள் வெளித்தெரியாத காலத்தில் தமிழ் இலக்கிய விமர்சனம் மேற்கத்தேய மார்க்சீசிய அணுகு முறையை ஏற்று தமிழிலும் அம்முறையை முன்வைத்தது. முக்கியமாக பேராசிரியர். க. கைலாசபதியின் "தமிழ் நாவல் இலக்கியம் முன்வைத்த பார்வைகள் முக்கியமானவை."

எனக் குறிப்பிட்டுள்ளார். மார்க்சீசிய அணுகுறையில் சமூகம், சமூக வாழ்வுமுறை என்பவற்றை யதார்த்த நிலையில் எடுத்துக் காட்டும் படைப்பாக பேராசிரியரின் தமிழ் நாவல் இலக்கியம் விளங்குகின்றது.

யதார்த்த வாத நிலையில் இலக்கிய விமர்சன எழுத்துக்களை வெளியிட்டவர்களில் பேராசிரியர் முதன்மையானவர். காவ்யா வெளியீடான எதார்த்த வாதமும் தமிழ் நாவல்களும்" என்னும் நூலில் க. பூரணச்சந்திரனுடைய கட்டுரையொன்றில் பேராசிரியர் க. கைலாசபதி அவர்கள் பற்றி

"எதார்த்த அடிப்படையை வைத்து நாவலை மதிப்பிட்ட நூல்கள்

மிகக்குறைவு, முதல் முயற்சி கைலாசபதியின் தமிழ் நாவல் இலக்கியம் என்னும் நூல்'' எனக் குறிப்பிட்டுள்ளது,

1968 கால கட்டங்களில் எழுதப்பட்ட பேராசிரியரின் தமிழ் நாவல் இலக்கியம் என்னும் நூல் எதார்த்தவாத நிலையில் விமர்சனப்பார்வையை முன்வைத்தது.

பேராசிரியரின் மார்க்சீசிய நுண்ணாய்வு முறைக்கு உலகளாவிய மார்க்சீசியப் பின்னணி காரணமாயிற்று மார்க்சீசியக் கோட்பாட்டின் உலகளாவிய வளர்ச்சி வெவ்வேறு வடிவங்களில் முன்வைக்கப்பட்டது. இங்கிலாந்து நாட்டில் அனுபவியல் முதன்மை மார்க்சீசியம் முன்வைக்கப்பட்டது. ஜேர்மனியில் கெகலிய மார்க்சீசியம் முன்வைக்கப்பட்டது. பேராசிரியர் கைலாசபதி இங்கிலாந்தில் தம் காலநிதிப் பட்டத்திற்காகப் படிக்கும் போது பிரிட்டிஸ் மார்க்சீசிய பேரறிஞர் ஜோர்ஜ் தாம்சன் என்பவரிடமே கற்றார். மார்க்சீசிய பார்வைகள் பல்வேறு வகைகளைக் கொண்டிருந்தாலும். அவற்றை இணைத்து தமது விமர்சன பார்வையில் எழுத்துக்களாக வெளிப்படுத்தியமையாலேயே எழுத்திலக்கிய உலகின் மார்க்சீசிய விமர்சன முன்னோடியாக விளங்கினார். எனலாம்.

## துப்புத் துலக்கிய சுறா

சுறா அதிக கோபமும் போர்க்குணமும் கொண்டது. அது, எது கிடைத்தாலும் விழுங்கும் குணம் கொண்டது. 1935ம் ஆண்டு பிடிக்கப்பட்ட சுறா பண்ணைக்கு அனுப்பட்டது. 8 நாட்கள் கழித்து அழுகிப் போகாமலும், ஜீரணமாகிச் சிதைவு படாமலும் இருந்த ஒரு மனிதக் கையை அது துப்பியது. மனிதனைச் சுறா தின்றுவிட்டுதா? என்று ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது முடிவில் அந்தக் கை மனித உடலிலிருந்து கத்திபோன்ற உலோகத்தால் துண்டிக்கப்பட்டது. என்று உறுதி செய்யப்பட்டது. விசாரணையின் பின் ஒரு வராத்திற்கு முன்பு காணாமல்போன ஒரு மல்யுத்த வீரனின் கை என்று தெரியவந்தது. மல்யுத்த வீரருக்கும் அவருடைய கூட்டாளிகளுக்கும் ஏற்டபட்ட பங்குத் தகராறில் அவர் கொல்லப்பட்டார். பிணத்தை ஒரு பெட்டியில் போட்டு மூட கை பெட்டிக்குள் அடங்காததால் அதை தனியே வெட்டி கடலில் எறிந்தனர். சுறா அதை விழுங்கி பத்திரமாக பாதுகாத்து அடையாளம் கொடுத்து கொலைகாரர்களை பிடிக்க உதவியது.

# இலங்கையில் சமஷ்டி ஆட்சிக்கோரிக்கையின் ஆரம்பங்கள்

வேலுப்பிள்ளை குணரத்தினம்
கிழக்குப் பல்கலைக்கழகம

இல்ங்கையில் வேரூன்றி நீண்டகாலமாக வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்ற இனப்பரச்சினையைத் தீர்க்கும் முகமாக சமஷ்டி ஆட்சிக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. சமஷ்டி ஆட்சி அமைப்பு இனப்பிரச்சினைக்கு தீர்வாக அமையுமா? அமையாதா? என்பது ஒருபுறமிருக்க இலங்கையின் அரசியல் வரலாற்றைப் பின்நோக்கிப் பார்கின்றபோது சமஷ்டி ஆட்சிக் கோரிக்கையை ஆரம்பத்தில் முன்வைத்தவர்கள் இலங்கையின் சிங்களத் தலைவர்களே என்பதை இங்கு கோடிட்டுக் காட்டலாம். சமஷ்டி என்பது அதிகாரங்கள் பன்முகப்படுத்தப்பட்ட ஒரு அரசாங்க முறையினைக் குறித்து நிற்கின்றது. மத்தியரசு ஒன்றின் தலைமையின் கீழ் அதன் அரசியலமைப்புக்கு உட்பட்ட வகையில் பல சிறிய மாநிலங்களோ அல்லது அரசுகளோ தமது சுதந்திரத்தினையும், தனித்துவத்தினையும். இழந்துவிடாதவகையில் சில பொதுத்தன்மைகளை அடைவதை நோக்காகக் கொண்டு அதிகார பன்முகவாக்கல் ஏற்பாட்டின் அடிப்படையில் இயங்கும் ஒருவகை ஆட்சிமுறையாகும். இவ்வாட்சிமுறையில் இணைந்துள்ள மத்திய - மாநில அரசாங்கங்கள் தமக்கென வரையறுக்கப்பட்டிருக்கும் நிர்வாகப் பரப்புக்குள் ஆதிக்கமுடையதாக விளங்கும். இந்த மாநில அரசாங்கங்கள் இனமொழி அல்லது பிராந்திய அடிப்படையில் பிரிக்கப்பட்டு அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டிருக்கும். சில பொது விடயங்களில் அதாவது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பாதுகாப்பு, வெளியுறவு, நாணய வெயியீடு............... போன்றவை மத்திய அரசாங்கத்துடன் சம்பந்தப்பட்டிருக்க பொலிஸ், சுகாதாரம்............ போன்றவை மாநில அரசாங்கத்துடன் பொறுப்பளிக்கப்பட்டிருக்கும். இத்தகைய பண்பினை பல சமஷ்டி ஆட்சி நாடுகள் பின்பற்றி வருகின்றன.

பிரித்தானியர் இலங்கையை ஆட்சிசெய்துகொண்டிருந்தபோது இலங்கையில் உயர் குழாத்தினர் நாடு சுதந்திரம் பெறுவதற்கான அமைப்பு ஒன்று உருவாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தனர். அதன்

வெளிப்பாடாக 1919 ஆம் ஆண்டு இலங்கைத் தேசிய காங்கிரஸ் என்ற அமைப்பை உருவாக்கினர். இந்த அமைப்பு இன. மொழி, மதம் என்ற வேறுபாடுகளுக்கு அப்பால் தேசிய ஒற்றுமை என்பதை அடிப்டையாகக்கொண்டு சுதந்திர விடுதலைக்காக இணைந்து செயற்பட்டது. இந்த ஒற்றுமையானது பிரித்தானியாவுக்கான ஒரு சவாலாக அமைந்தது. அதாவது. இந்தியாவைப் போன்று ஒரு பாரிய தேசிய விடுதலை இயக்கமாக அமையாது அதனைத் தடுத்துவிடவேண்டியது பிரித்தானியாவின் பாரிய எண்ணமாக இருந்தது.

அதற்குரிய வழியாக பிரித்தானியருடன் எப்போதும் இணைத்துப் பேசப்படும் பிரித்தாளும் தந்திரத்தைக் கடைப்பிடித்தனர். அதனை அப்போது தேசாதிபதியாக இருந்த மனிங் மிகவும் சிறப்பாகக் கையாண்டார். மனிங்கின் பிரித்தாளும் தந்திரத்தைப் பற்றி கே. எம். டி சில்வா (K.M. de. Silva) "அவர் கையாண்ட விதம் பிரித்தாளும் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு வழிகாட்டும் பாடநெறி நூலாகக் கொள்ளத்தக்கது. "என்கின்றார்.

சிங்களவர் - தமிழர் என்ற இனப்பகை உணர்வை ஊட்டி தமிழரைப் பிரித்தெடுப்பதில் வெற்றி கண்ட மனிங் கரைநாட்டுச் சிங்களவர் - கண்டிச்சிங்களவர் என்ற உணர்வை வளர்ப்பதில் முனைந்து நின்றார். இலங்கை அரசியலில் மிதவாதிகள் - தீவிரவாதிகள் என்ற பிரிவு தெளிவாக வெளிப்படுவதொன்றாக. இருந்தாலும் தேசிய காங்கிரசின் பலவீனம் உண்மையில் இந்த வேறுபாட்டிலன்றி வலது சாரியின் மத்தியிலே சற்று விலகி நின்ற ஒரு கூட்டத்தவர் ஏற்படுத்திய பிளவில் மூலம்தான் உருவாக முடியும் என்பதை மனிங் நன்குணர்ந்து இருந்தார். பழமை பேணும் வாதிகளாக விளங்கிய இக்குழுவினர் இலங்கை தேசிய காங்கிரசானது கரையோரச் சிங்களவர் இலங்கை அரசியலில் செல்வாக்குப் பெறுவதற்கான ஒரு கருவியேயன்றி வேறில்லை என்றதொரு சந்தேகத்தை வளர்த்துக் கொண்டிருந்தனர் மனிங் இச்சந்தேகத்தினை மிகுந்த திறமையுடன் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி கண்டிச் சிங்களவரை அதிலிருந்து பிரித்தெடுக்கச் செயற்பட்டார். கண்டிச் சிங்களவர் சிறுபான்மை இனம் என்ற சிந்தனைக்கு உரமிடும் வகையில் கண்டிச் சிங்களவரின் தூதுக்குழுவொன்றை லண்டனுக்கு அனுப்பினார். திட்டமிட்டுச் செயலாற்றிய மனிங்கின் முயற்சியால் 1925ஆம் ஆண்டு இலங்கைத்

தேசிய காங்கிரஸ் கரையோரச் சிங்களவரின் ஓர் அமைப்பாக அன்றி வேறு வகையாகத் தென்பட முடியவில்லை.. அதாவது, கண்டிச் சிங்களவர் இலங்கைத் தேசிய காங்கிரசில் இருந்து வெளியேறினர்.

தேசிய காங்கிரசில் இருந்து வெளியேறிய கண்டிச் சிங்களத் தலைவர்கள் 1925 ஆம் ஆண்டு இலங்கைத் தேசிய காங்கிரசுக்கு எதிராக கண்டித் தேசிய சபை ஒன்றை உருவாக்கினர். இதேயாண்டு நடைபெற்ற மாநாட்டில் கண்டியருக்கு வேறான பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை உறுதிப்படுத்தப்பட்டது. 1927ஆம் ஆண்டு உரிமைகள் பிராந்திய நலன்களைப் பாதுகாப்பதற்கு இலங்கைக்கு சமஷ்டி ஆட்சிமுறை ஏற்படுத்த வேண்டும் என்னும் கோரிக்கையை முன்வைத்தது. பிரித்தானியா இத்தகைய கோரிக்கைகளுக்கு சாதகமாக பதில் அளிக்கவில்லை. காரணம் பிரித்தானியா ஒற்றையாட்சியில் ஊறிய நாடு., அதேவேளை அத்தகைய ஆட்சிமுறை வழங்கப்பட்டால் தனது நோக்கத்துக்கு தானே குழிதோண்டியதாகப் போய்விடும் என்பதைக் கருத்திற் கொண்டு வழங்கவில்லை. கண்டித் தேசிய சபை சமஷ்டி ஆட்சியைக் கோரிய வேளையில் தமிழ்த் தலைமைத்துவம் ஒற்றையாட்சியின் கீழ் உள்ள சட்டமன்றத்தில் எவ்வளவு பிரதிநிதித்துவத்தைப் பெற முடியுமோ அதனைப் பெறுவதிலேயே அக்கறை கொண்டு இருந்தார்கள். கண்டித் தேசிய சபை முன்வைத்த சமஷ்டிக் கோரிக்கையில் கரையோரப் பகுதிகள், கண்டி மலைநாட்டுப் பகுதிகள் வடக்கு கிழக்கு இணைந்த பகுதிகள் என மூன்று பிராந்தியங்கள் அடங்கி இருந்தன.

கண்டி தேசிய சபைக்குப் புறம்பாக எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்கா சமஷ்டி ஆட்சிக் கோரிக்கையை முன்வைத்து இருந்தார். அவர் ஒற்றையாட்சியைவிட சமஷ்டி ஆட்சியே சிறந்தது. அது இலங்கையில் வேறுபட்ட இனங்களுக்கு இடையே புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கு உதவும் என நம்பினார். எஸ். டபிள்யூ. ஆர். டி . பண்டாரநாயக்கா'' பழைய வரலாற்றைப் பார்ப்பார்களேயானால் இந்த மூன்று இனங்க்ளாகிய தமிழரும். கரைநாட்டுச் சிங்களவரும் கண்டிச் சிங்களவரும் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையில் வாழ்ந்தும், ஒன்றிணையும் போக்கு எதனையும் கொண்டு இருக்கவில்லை என்பதை இவர்கள் காண்பார்கள். இவர்கள் தங்கள் மொழியையும்

பழக்கவழக்கங்களையும் பேணி இருந்தனர். இந்த வேறுபாடுகள் மெல்ல மறையும் என்பதில் நம்பிக்கை வைக்கும் எவனும் சிந்தித்து செயலாற்ற முடியாத ஒருவராவான்'' என்று குறிப்பிட்டிருந்தார். எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா கருதிய சமஷ்டியாட்சி கண்டித் தேசியசபை முன்வைத்த சமஷ்டி அமைப்பைவிட சற்று பரவலானதாக அமைந்தது. அது அப்போது நிலவிய மாகாண நிர்வாகப் பிரிவுகளை அடிப்படையாக கொண்டிருந்தது.

1947 ஆம் ஆண்டு தொடக்கம் தமிழர்களின் மத்தியில் இருந்து சமஷ்டி ஆட்சிக் கோரிக்கை எழுச்சியடையத் தொடங்கியது. தமிழ்க் காங்கிரஸ் குடியேற்ற நாடுகளின் ராஜாங்க செயலாளருக்கு அனுப்பிய தந்தியில் தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை கோரி இருந்தது. பின்னர் தமிழ்க்காங்கிரஸ் டி. எஸ். சேனநாயக்காவின் அரசாங்கத்துடன் இணைந்து இருந்தது. இது இலங்கையில் வாழ்ந்த இந்தியத் தோட்டத் தொழிலாளர்களின் உரிமையைப் பறிப்பதில் ஜக்கிய தேசியக்கட்சியுடன் சேர்ந்து வாக்களித்தது. இக்கட்சியின் செய்கையை விரும்பாத எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமை யிலான குழு அக்கட்சியில் இருந்து வெளியேறி இலங்கைத் தமிழரசுக் கட்சியை உருவாக்கினர். அக்கட்சி சமஷ்டி ஆட்சியை வலியுறுத்தும் வகையில் சமஷ்டிக் கட்சி என்ற நாமத்தையும் சூட்டிக்கொண்டது. 1949 ஆம் ஆண்டு அரசாங்க எழுதுவினைஞர் சங்க மண்டபத்தில் நடைபெற்ற சமஷ்டிக் கட்சியின் மாநாட்டில் எஸ். ஜே. வி. செல்வநாயகம் "தமிழ் இனம் பெரிய தேசிய இனத்தால் வழங்கப்பட்டு அழியாதிருக்க வேண்டுமாயின் சமஷ்டி ஆட்சிமுறை ஏற்படுவது முக்கியமானது "எனக் குறிப்பிட்டு இருந்தார்.

முடிவாக பல இன. மொழி, மதங்களைக் கொண்டுள்ள ஒரு நாட்டிற்கு சமஷ்டி ஆட்சிமுறையே சிறந்தது என பல நாடுகள் அனுபவரீதியாக உணர்ந்துள்ளன. அதேவேளை சமஷ்டி ஆட்சிமுறையைப் பின்பற்றும் நாடுகளில் சமஷ்டிக்கு பல கீறல்கள் விழுவதையும் நடைமுறையில் அவதானிக்கலாம். ஆனால் இலங்கையில் முன்னைய காலங்களைவிட தற்பொழுதுதான் சமஷ்டி ஆட்சி பற்றிய அக்கறை வேகமாக ஏற்படுகின்றன. அத்துடன் சமஷ்டி ஆட்சிபற்றிய கோரிக்கையை ஆரம்பத்தில் முன்வைத்தவர்கள் சிங்களத்தலைவர்களே என்பதை

சுட்டிக்காட்டக்கூடியதாகும். அதன் பின்புதான் தமிழர்கள் மத்தியில் இருந்து இக்கோரிக்கை வெளிவந்ததென்பது குறிப்பிடத்ததக்கதாகும்.

****

# கச்சானே கச்சானே !!

- எஸ் சிவலிங்கம் -

கச்சானே! கச்சானே!
கடும் துயரம் தரும் காற்றே
உச்சி வெயில் வேளையிலும்
உலா அந்தி பொழுதினிலும்
உச்ச மரக் கிளைகளிலே
பட்சி துயில் வேளையிலும்
மூச்சை இளம் புயலாக்கி
மூர்க்காமாய் ஏன் வீசுகின்றாய்

கச்சானே! கச்சானே!
கடும் துயரம் தரும் காற்றே!
கூச்சமின்றிக் கூறுக உன்
மச்சாளா மலர்த் தென்றல்
இச்சையுடன் இணைய அவள்
இசையாத காரணத்தால்
அச்சுறுத்த கொடுங் கோலம்
அவனியில் நீ கொண்டாயா?

கச்சானே உன் செருக்கால்
கனத்த மழை பெய்வதில்லை
குச்சிக் குடிசை வாழ்வோன்
குடி மூழ்கிப் போகின்றான்
அச்சம் இன்றி வாழ்வபவனோ
அடுக்கு வீட்டுச் செல்வந்தன்
உச்சரித்தோம் உணர்ந்திடுவீர்
ஏழைகளும் மனிதர்களே

கச்சணிந்த தோகை மயில்
கனிவான துரொபதையாள்
உச்சி முதல் பாதம் வரை
உணர்விழந்து உயிர் துடிக்க

துச்சாதனன் துகில் உரிந்தான்
துவாரகையான் துணி கொடுத்தான்
கச்சான் எமை துகில் உரிந்தால்
காத்தருள்வார் யாரம்மா?

வடதிசையின் பனைகளையும்
கீழ் திசையின் தென்னையையும்
படை நடத்தும் தென்திசையான்
படிப்படியாய் அழிக்கின்றான்
குட திசையின் கொடும் காற்றே
குலம் தழைக்க எஞ்சியுள்ள
வடகிழக்கின் வளங்களை நீ
விட்டு விடு அழிக்காதே

ஆனியிலே பிறந்து வந்தாய்
ஆடியிலும் கூட வந்தாய்
மேனி எங்கும் புழுதி வாரி
மேலாடை தொட்டிழுத்தாய்
காணி வளர்ப் பயிரினங்கள்
காயுதய்யா வரட்சியினால்
கூனி நின்று கூப்புகின்றோம்
ஆவணியில் அடங்கிவிடு

சத்திர சிகிச்சையினால்
சாதனைகள் பல படைத்தோம்
*சாத்திர சிகிச்சையினால்*
சதியை வெல்ல முயற்சி செய்தோம்
சூத்திரம் நாம் கண்டதில்லை
உன்னை சுத்தமாய் ஒழிப்பதற்கு
ஆத்திரம் தான் அடைகின்றோம்
ஆண்டவனே காத்தருள்வாய்!

# தமிழை வளர்ப்பது புலம் பெயர்ந்தவர்களா?

யாழினி பழனிவேல்

இன்று நம்மவர்களில் சிலர் யுத்த புயலில் சிக்கி திசை தெரியாமல் அநாதரவான நிலையில் பற்றிங்கு ஆதாரம் இன்றி வாழ வேண்டும் என்ற ஒரே வேட்கையினால் வாழ வழி தேடி இருண்ட அவர்களின் வாழ்வு புலரும் என்ற நம்பிக்கையில் புலம் பெயர்ந்தார்கள் தாய் மடிபிடிக்காமல் அவர்கள் வேற்று மடிதேடி ஓட நிர்பந்தம் காரணமாக பந்தங்களை விட்டு பயணம் போனார்கள். ஆனால் உடல் இடம் பெயர்ந்தாலும் மனம் இடம் பெயரவில்லை. வேற்று மண்ணில் வாழும் போதுதான் சுதந்திர வேட்கையும் நாட்டுப் பற்றும் மொழிப்பற்றும் தழைக் கும். எமக்கு அதன் அருமையும் பெருமையும் புரிவதில்லை. ஒரு சிலர் தாம் வாழும் சூழ்நிலைக்கேற்ப தம்மை மாற்றிக் கொண்டாலும் அவர்களின் அடிமனத்தில் தேங்கி நிற்கும் ஏக்கங்கள் எவராலும் அறிய முடியாது. வெளிநாட்டில் அன்னிய மண்ணில் அன்னிய கலாசாரத்தில் திக்கு தெரியாமல் என்ன செய்வது என தெரியாமல் வாழும் எம் சோதரர்கள் பரிதாபத்திற்கு உரியவர்கள்.

பிற தேசத்தில் வாழும் போது சோதரர்கள் தமிழை கலாசாரத்தை மறந்து விட்டார்கள் என இங்கு தமிழர் என சொல்லி கொள்ளும் நாம் ஆதங்கப்படுகிறோம். தமிழன் என்று எம்மை அடையாளம் காட்ட முடியாமல் தாயகத்திலேயே தலை கவிழ்ந்து வாழும் நாம் சூழ் நிலை காரணமாகவும், பயம் காரணமாகவும் வேற்று மொழி பேசவில்லையா? வேறுகலாசாரத்தில் வாழவில்லையா? அவ்வாறாயின் நாம் தமிழை, பண்பாட்டை மறந்தவர்தானே. நாம் சொல்லலாம் சூழ்நிலை காரணமாகத்தானே நாம் இவ்வாறு வாழ்கிறோம். அவர்களுக்கு என்ன அவர்கள் தமது அன்றாட அலுவல்களை கவனிப்பதற்கு ஆங்கிலத்தை ஊடக மொழியாக பாவிக்கிறார்கள். வேற்று மொழி பேசவேண்டும் என்ற துடிப்பும், ஆதங்கமும் எமது மனங்களில் இல்லையா? அதே உணர்வுதான் அவர்களின் மனத்திலும் இருக்கும்.

சூழ்நிலை எனும் வெளிச்சத்துக்கு பயந்து அச்சம் எனும் போர்வை கொண்டு போர்த்திக் கொள்ளும் நாம் எதிர்கால சந்ததிக்கு எதைச் செய்ய முடியும். இன்று தமிழன் இல்லாத நாடும் கோயில்கள் இல்லாத இடமும் உண்டா? தமிழன் என்பதை நாம் மறந்தாலும்

தமிழன் உலகின் பார்வைக்கு தமிழன் தான். வாழுவோமா என்ற வினாவிற்கு விடை தெரியாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் வயிறை வளர்க்கவே போராட வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். நாம் உயிர் இருந்தால் தானே தமிழை வளர்க்க முடியும். அந்த உயிருக்கே உத்தரவாதம் இன்றி எந்த இடத்திலும் எம் ஆவி பறிக்கப்படலாம் என்ற எண்ணத்தோடு நித்தம் செத்து கொண்டிருக்கும் நாம் சாகாமல் எம் தமிழை வளர்க்க முடியுமா? அந்த பொறுப்பும் தார்மீக கடமையும் தேசம் விட்டு தேசம் சென்றாலும் அவர்களுக்கே உரியதே. உதட்டளவில் நாம் சிங்களம் பேசினாலும் நாம் தமிழன் என்பதை மறந்து விடுவதில்லை. உள்ளத்தில் ஊறிப்போன மொழிப் பற்றும், பாசமும் எல்லா மனிதருக்கும் உரியவைதானே.

* ═══ *

## கிழக்கொளி விளையாட்டுச் செய்திகள்

தொகுப்பு - ரெட்ணா

கி.ப ஊழியர் சங்க 15வது வருட நிறைவையொட்டி கி.ப கல்வியணி, கல்விசாரா ஊழியர்களுக்கிடையே 10 ஓவர்கள் கொண்ட சினேகபூர்வ மென்பந்து சிரிக்கட் சுற்றுப்போட்டியொன்று கடந்த 29.06.2000 அன்று ஏற்பாடு செய்யப்பட்டு நடாத்தப்பட்டது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடி திருமணமாகாத அணி 19 ஓட்டங்களினால் திருமணமான அணியைத் தோற்கடித்தது,

திருமணமாகாத அணியின் சார்பில் ஆடிய ரெட்ணராஜ். சதீஸ் ஆகியோர் இணைந்து 84 ஓட்டங்களையும் சதீஸ் 51, ரெட்ணராஜ் - 33 ஆ.இ.) பெற்றது குறிப்பிடத்தக்கது. அணி மொத்தமாக 10 ஓவர்களில். 106 ஓட்டங்களைப் பெற்றது. அதில் திரு. கனகசபை 38 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தார்.

ஆட்டத்தின் நாயகனாக, 38 ஓட்டங்களையும், 21 ஓட்டங்களுக்கு ஒரு விக்கட்டையும் கைப்பற்றிய திரு. கனகசபை தெரிவுசெய்யப்பட்டார். பரிசளிப்பு வைபவங்களில் பிரதம அதிதியாக கவந்து கொண்ட திருமதி ச. பரராஜசிங்கம் (உதபிப்பதிவாளர்/நலன்புரி) பரிசில்களை வழங்கினார். திரு. E.G.J. கனகசபை (தலைவர்/உடற்கல்வி பிரிவு) தனது சிறப்புரையில் "ஊழியர்களிடையே பரஸ்பர புரிந்துண்ர்வுக்கும் ஒற்றுமைக்கும் இவ்வாறான போட்டிகள் அடிக்கடி இடம்பெறுவது அவசியம் எனவும், அவ்வாறான நடவடிக்கைகளுக்கு தான் ஆவன செய்துவருதாகவும்" குறிப்பிட்டார். பின்னர் கி.ப.ஊ.ச செயலாளர் திரு. எஸ்.எஸ். சூரியகாந்தனின் நன்றியுடன் போட்டி நிகழ்வுகள் முடிவுக்குவந்தன

## "கல்வி"

# பெரியாரியலிலிருந்து.... மாணவர்

தமிழ் நாட்டின் பகுத்தறிவு சிந்தனையாளர்களில் தந்தை பெரியார். மனிதகுல முன்னேற்றத்திற்கு கூறிய வார்தைகளும் காட்டிய வழிகளும் பயன் மிக்கவை பெரியார் கல்வி தொடர்பாக கூறியவை பல அவற்றுள் மாணவர்கள் தொடர்பாக அவர் கூறியவற்றை பேராசிரியர். மா. நன்னன் தொகுத்துள்ளார். அதிலிருந்து ஒருபகுதியை இன்றைய மாணவ சமூதாயத்தின் சிந்தைனக்காக தருகின்றேன்.

- அழகுகிருபா -

நன் : ஐயா, மாணவப் பருவம் எந்த வயது வரை நீடிக்கும்?

பெரியார்: மனிதன் பிறந்த நாள் முதற் கொண்டு சாகின்ற வரையில் உலகில் மாணாக்கனாகவே இருக்கின்றான் அவன் கற்றுக்கொள்ள வேண்டியது எவ்வளவு இருக்கின்றது.

நன் : கல்விக் கூடங்களில் மாணவர்களை எப்படி நடத்த வேண்டும் என்று தாங்கள் கருதுகிறீர்கள்?

பெரியார் : கல்விச்சாலை கல்லூரி என்பவைகள் "எழுத்து கருத்து அறிவிக்கும் நிலையம்" என்பது மாத்திரம் அல்லாமல், மனிதவளர்ச்சி அடையும் சிறுவர், இளைஞர், வாலிபர் ஆகியவர்களுக்கு அடக்கம், ஒடுக்கம், கட்டுப்பாடு, ஒழுக்கம் கற்பிக்கப்படும் ஸ்தாபனமாகும்..... கல்வி ஸ்தாபனங்களைப் பொறுத்தவரை மாணவர்கள் இராணுவக் கட்டுப்பாட்டை ஒத்த கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவர்களாக இருக்கச் செய்ய வேண்டியதுதான் அவசியமாகும்.

நன் : மாணவப் பருவம் எத்தகையதாய் இருக்க வேண்டும்?

பெரியார் : மாணவன் தன்னை இன்னவன் என்று உணர்ந்து கொள்வதும் எதையும் அறிந்து கொள்கின்றதும், தெரியாதவைகளைக் கேட்டுத் தெரிந்து கொள்கிறதும். தான் மாணவப் பருவம் என்பதை உணரவேண்டும் இவ்வித எண்ணமுள்ள மாணவன்தான் பிற்காலத்தில் எதையும் அறிந்து அறிவாளியாக விளங்க முடியும்.

நன் : மாணவரின் நடைமுறைக்குதவும் படியாகத் தாங்கள் கூறும் அறிவுரை ஏதேனுமுண்டா?

பெரியார் : பள்ளியில் படிக்கும் மாணவ, மாணவிகள் நல்ல நகைகள், ஆடம்பர உடைகள் உடுத்துவதுதான் பெருமையென்று கருதாமல் எளிய உடைகளே உடுத்த வேண்டும். படிக்கக்கூடிய இடத்தில் எல்லாப்பிள்ளைகளும் கலந்து பழகும்படியான இடங்களில் பேதங்கள்

இல்லாமலிருப்பது தான் நல்லது. படிப்பின் காரணமாகவே நல்ல நிலமை அடையமுடியும் ஒவ்வொரு மாணவ, மாணவியும் தாம் முதன்மையாகப் படிப்பிலிருக்க வேண்டுமென்று எண்ணிப் படிப்பில் கவனம் செலுத்த வேண்டும்.

நன் : பள்ளிப் பருவத்தில் மாணவர் அணுகவொண்ணாச் சிந்தனை ஒன்றைச் குறிப்பிடுங்கள்.

பெரியார் : இன்றைக்கு யோக்கியமாக நடந்து பயன் அடையமுடியாது. யோக்கிய மாணவனிடம், யோக்கியமான முறையில் நடந்தால் பலன் கிட்டும். அயோக்கியனிடம் யோக்கியமாக நடந்தால் எப்படி பலன் கிட்டும் ? பலன் கிட்ட அயோக்கியமாகத்தானே நடந்தாக வேண்டிய நிலை ஏற்படுகின்றது. என்றாலும் இவற்றைப் பள்ளி வயதில் சிந்திக்க கூடாது.

நன் : மாணவர்கள் எவற்றையெல்லாம் கற்க வேண்டும்? மற்றவர்களுடன் அவர்கள் எப்படிப் பழகவேண்டும்?

பெரியார் : மாணவர்கள் பின் வாழ்வில் நடந்து கொள்ளவேண்டிய விடயங்களை எல்லாம் கற்க வேண்டும் தம்மால் மற்றவர்களுக்கு தொல்லை இல்லாமல் நடந்து கொள்ளப் பழகவேண்டும்.

நன் : மாணவர்களிடம் அமைதிக் குறைவு ஏற்படுவதற்கான காரணம் யாது?

பெரியார் : மாணவர்கள் மனதில் ஜய்டியலிசம் அழிந்து மெட்டீரியலிச உணர்ச்சி மேலோங்க வேண்டும் என்றாலும் மாணவர்களிடம் உள்ள அமைதி இன்மைக்குக் காரணம் மாணவர்களின் கல்வி முறையில் உள்ள கோளாறுதான் ஆகும்.

நன் : மாணவர்களுக்கு தாங்கள் குறிப்பிட்டுக் கூற விரும்பும் இலட்சியம் யாது?

பெரியார் : ஒவ்வொரு மாணவரின் இலட்சியமும் தான் மனிதனாக பிறந்து மனித சமூதாயததிற்குத் தொண்டாற்றுவதற்காக என்றிருக்க வேண்டும்.

நன் : மாணவர் எப்படிப் படிக்க வேண்டும்?

பெரியார் : மாணவர்களிடம் கருத்துத் தெளிவு இருப்பது மிகவும் அவசியம் கருத்தில் குழப்பத்திற்கு இடம் தரலாகாது. கருத்துத் தெளிவுபெற நன்முறையில் ஆழ்ந்த சிந்தனையுடன் படிக்க வேண்டும்.

நன் : மாணவர்தம் கடமையாகத் தாங்கள் எதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறீர்கள்?

பெரியார் : நமது மாணவர் சமுதாயம் நம் நாட்டை அன்னிய ஆதிக்கம் அன்னிய காலச்சராம் ஆகியவற்றிலிருந்து விடுவித்து மானமும் அறிவும் பெறத் செய்வதையே கடமையாகக் கொள்ள வேண்டும்.

நன் : மாணவர்க்கு பயன் மிக விளைவிக்கும் ஆசிரியர் யார்?

பெரியார் : படிப்பது அறிவுக்குத்தான். அறிவு கட்டுப்பாடு அற்ற சுதந்திர சிந்தனையும் உள்ளவர்களாக இருக்க வேண்டும். மாணவர்கள் சிறந்த அறிவைக் கல்வியாகவும், அனுபவத்தையே வாத்தியாராகவும் கொள்ள வேண்டும்.

நன் : மாணவர்கள் பகுத்தறிவுப் பிரச்சாரத்துக்கு வரலாமா?

பெரியார் : மாணவர்களுக்குப் படிப்பபுத்தான் முக்கியம் இதிலே எந்தக்காரண த்தைக் கொண்டும் தளச்சியடையக் கூடாது? சினிமாவுக்கும் கோயிலுக்கும் போகக்கூடாது போகின்றவர்களிடம் பகுத்தறிவுக் கருத்துக்க ளைக் கூறித் தடுத்து நிறுத்தவேண்டும்.

# படித்துச் சுவைத்த சிலேடைப்பாடல்

– கீரத்திராஜா –

திருமலைராயனின் மந்திரி ஒருவருடன் காளமேகம் நடந்து சென்று கொண்டிருந்தார். களத்து மேட்டிற்கு அருகே ஒரு கொல்லையில், சில உழவர்கள் கூளங்களைக் குவித்து அடுக்கிப் படப்பாக வேய்ந்து கொண்டிருந்தார்கள்.

(கூளம் என்பது வைக்கோல் பழுத்த நெல் தாள், அறுத்து அடித்து நெல்லைப் பிரித்தபின் வைக்கோல் ஆகும்.)

மந்திரியாரும் காளமேகமும் வருவதைக் கண்டு படப்பை விட்டுக் கீழிறங்கி நின்று வணங்கினார்கள் அந்த ஆட்கள். அவர்களிடம் நலன் விசாரித்து விட்டு, "போய் வேலையைப் பாருங்கள்" என்று கூறி மந்திரி விடை பெற்றார்.

காளமேகம் சொன்னார். "நாம் தாம் அவர்களுக்கு முதலில் வணக்கம் சொல்லியிருக்க வேண்டும் நாட்டையும் மக்களையும் காக்கும் வீரர்கள் அவர்கள் உண்மையான போராளிகள்" என்று பாராட்டினார்.

இது மந்திரிக்குப் புதிராய் இருந்தது.

"புலவர் ஐயா ! அவர்கள் போர் வீரர்கள் அல்ல, உழவர்கள் என்றார்.

"போர் வீரர்களை விட உழவர்களான ஏர் வீரர்களே சிறந்தவர்கள் போர்வீரர்கள் எதிரிகளின் படையை அழிக்கலாம். , ஆனால் எதையும் படைப்பதில்லை. இவர்கள் நமக்கெல்லாம் அன்னம் படைக்கிறார்கள் உண்மையில் இவர்களும் போராளிகளே !" என்றார் காளமேகம்.

"போராளிகளா!" என்றார் மந்திரி.

"ஆமாம், நாம் வரும் போது அவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள் ? போர்செய்து கொண்டிருந்தார்கள் அல்லவா ? .

"அது வெறும் வைக்கோல் போர்!"

"வைக்கோல் மட்டும் என்ன? அது நமது யானைப் படைக்குச் சமம் சாமா்னியமாய்க் கருத வேண்டாம்!"

மந்திரிக்குப் புரியவில்லை. "வைக்கோலும் போர் யானயைும் எப்படி ஒன்றாகும் ?" என்று கேட்டார். மந்திரி.

காளமேகம் கவி பாடினார்:

வாரிக் களத்தடிக்கும் வந்து பின்பு , கோட்டைபுகும்
போரில் சிறந்து பொலிவாகும் - சீருற்ற
செக்கோல் மேனித் திருமலைராயன் வரையில்
வைக்கோலும் மால் 'யானை யாம்.

காளமேகம் விளக்கினார்.

"போர்க் களத்தில் யானைகள், தம் துதிக்கையால் பகைவரின் காலாட்படை வீரர்களை வாரி எடுத்துத் தரையில் மோதிக் கொல்லும். பின்பு அவை பகைமன்னர்களின் கோட்டைகளைத் தகர்த்து உள்ளே புகும். இவையே போர் யானைகளின் செயல்

நுனியில் நெல்லைத் தாங்கியிருக்கும் நெற்கதிர்கள் அறுவடை செய்வோரால் வாரி அணைத்துக் கொண்டு வரப்பட்டுக் களத்தில் அடிக்கப்படும் பின்னர் மாடுகளின் கால்களால் மிதிபட்டு, நெல் நீக்கப்பட்ட வைக்கேரல். போர்களாக, கோட்டைக்குள் சீராக வைக்கப்படும்.

வைக்கோலைச் சும்மா அப்படியே காலில் மிதிபடும் படி போட்டு விட்டால், அதன் புதுமை குலைந்து, நைந்து கூளமாகி விடும்: குப்பைக்குச் சமமாகி விடும். அப்படிக் கெடாமல் வைக்கோலை போராக அடுக்கி வேய்ந்து விட்டால் போரின் மீ:து மழை பெய்தாலும் உள்ளிருக்கும் வைக்கோல் நனையாமல் பொலிவுடன் நன்றாய் இருக்கும் (போரில் சிறந்து பொலிவாகும்)

இவ்வாறு வைக்கோல் யானைக்குச் சமமாகும் விதத்தைக் கவி காளமேகம், தம் அறிவாற்றல் துலங்கச் சிலேடையாய் பாடிய திறன் அறிந்து மந்திரி, அவரைப் பெரிதும் பாரட்டினார்.

******

# இறக்குமதிச் சிரிப்புகள்

தொகுப்பு : சபிதா வேலப்பன்

கிழக்கு பல்கலைக் கழகம்

**படங்கள் பிற்பனை**

பிள்ளைகளுடன் சேர்ந்து எடுத்துக்கொண்ட குழுப் போட்டோ பிரதிகளை ஒவ்வொருவரையும் வாங்க வைப்பதற்கு வகுப்பாசிரியை பிரயத்தனம் செய்து கொண்டிருந்தார்.

பிள்ளைகளைப் பார்த்து "பிள்ளைகளே! யோசித்துப் பாருங்கள் நீங்களெல்லாம் வளர்ந்த பிறகு இதனைப் பார்த்து இது ஜெனிபர் இவள் இப்போ வக்கீலாக இருக்கிறாள் "என்றும், 'இது மைக்கல்- இவன் இப்போ டாக்டராக இருக்கிறான்' என்றும் சொல்லிக்கொள்ளும் போது உங்களுக்கு எவ்வளவு பெருமையாக இருக்கும் என்ன ?" என்று கூறிக் கொண்டிருந்தார்.

அப்போது அறையின் பிரிவரிசையிலிருந்து ஒரு மெதுவான குரல் இவ்வாறு ஒலித்தது.

"ஆம். அது டீச்சர் - அவர் செத்துட்டார்."

**என்னுடைய அப்பாதான்**

மூன்று பள்ளி மாணவர்கள் தங்களது அப்பாக்களின் பெருமைபேசி விவாதித்துக் கொண்டு வந்தனர்.

ஒருவன் : "என் அப்பா 90கி.மீ வேகத்தில் பந்தை வீசிவிட்டு அது விக்கட்டை தாக்கு முன்னர் ஓடிச்சென்று அதைக் "கட்ச்" பிடித்துவிடுவார்"

மற்றவன் : "அப்படியா? என் அப்பா வில்லிலிருந்து அம்பொன்றை எய்துவிட்டு அதன் இலக்குக்கு முன் ஓடிச் சென்று அதனைப் பிடித்து அது சரியாக இலக்கைத் தாக்குமா? என்று உறுதிப்படுத்திக் கொள்வார்."

மூன்றாமவன் : "ப்பூ..! இவ்வளவுதானா? உங்களிருவரின் அப்பாக்களும் என் அப்பாவின் வேகத்திற்கு கிட்டவும் நெருங்கமுடியாது. என் அப்பா ஒரு அரசாங்க சேவையாளர். அவர் 4.00 மணிவரை வேலை செய்கிறபோதிலும், அவர் தினமும் 3.30 மணிக்கே வீட்டுக்கு விந்திடுவார்."

## பெரிய குடும்பம்

'ஈரா' -'எஸ்தர்' 'ஏழு பிள்ளைகளைக் கொண்ட ஒரு தம்பதி ஐரோப்பாவிலிருந்து அமெரிக்காவிற்கு குடிபெயர்ந்தபின் குடியிருக்க வீடு தேடித் திரிவதில் மிகச் சிரமப்பட்டனர். தகுதியான வீடு கிடைத்தபோதும் பெரிய குடும்பம் என்ற காரணத்தினால் உரிமையாளர்கள் வாடகைக்குவிட தயக்கம் காட்டினர் பலநாட்கள் அலைந்தும் பலனில்லாமற் போனதால், ஒரு நாள் ஈரா தன் மனைவியிடம், பிள்ளைகளில் இளையவர்கள் நான்கு பேரைக் கூட்டிக்கொண்டு மயானத்துக்குச் சென்றுவிடுமாறு கூறிவிட்டு வீடு தேடிச் சென்றார்.

வீடொன்று பார்த்துப் பேசிக் கொண்டிருக்கும்போது வீட்டுரிமையாளர் வழமையான கேள்வியைக் கேட்டார்.

"உங்களுக்கு எத்தனை பிள்ளைகள்?"

ஈரா ஆழ்ந்த பெருமூச்சு விட்டபடி சொன்னார்.

"ஏழு...ஆனால் நான்கு பேர் தங்கள் அன்புத் தாயாருடன் மயானத்திலிருக்கிறார்கள்"

அவருக்கு அந்தவீடு கிடைத்தது.

## நித்திரையின்மை

நித்திரையில்லை என்ற முறைப்பாட்டுடன் டாக்டரைச் சந்திக்கச் சென்றார் ஒருவர். அவரை முழுமையாகப் பரிசோதித்து உடல்ரீதியான குறைபாடு எதுவுமில்லாதிருப்பதை அறிந்த டாக்டர் பின்வரும் ஆலோசனையை வழங்கினார்.

"நீங்கள் இனி படுக்கைவரைக்கும் உங்கள் 'பிரச்சினைகளை சொண்டுசெல்வதை நிறுத்திக்கொள்ள வேண்டும்."

அதற்கு அவர் "ஆம் நானறிவேன் ஆனால் என் மனைவி தனியே தூங்குவதற்கு மறுக்கிறாளே என்றார்.

# ஆளுநர் விருதுபெற்ற பறைமேளக் கூத்துக் கலைஞர் கலாபூசணம் வையன் ஆனைக்குட்டி

- க. சீவரத்தினம் -

இந்தியாவிலும், ஈழத்திலும் தலித்மக்களின் சுயகௌரவம், சுயமரியாதை என்பனவற்றை வெளிப்படுதும் வகையில் தலித் மக்களையும் அவர்களுடைய பிரச்சினைகளையும் பல்வேறு தளங்களில் வைத்து அலசப்படும் இன்றைய சூழ்நிலையில் ஈழத்தில் தலித் சமூகத்தின் மூத்த கலைஞரான வையன் ஆனைக்குட்டி அவர்கள் வடக்கு, கிழக்கு மாகாணசபையின் 1999ம் ஆண்டுக்கான ஆளுநர் விருதினை பெற்றிருக்கின்றார். இவ்வேளையில் அவரைப் பற்றிய சிறு அறிமுக மொன்று அவசியமானதாகும்.

1917ம் ஆண்டு மட்டக்களப்பில் களுதாவளையை பிறப்பிடமாகக் கொண்ட வையன் ஆனைக்குட்டி அவர்கள் 1929ம் ஆண்டிலிருந்து பறைமேளக்கூத்துக்காக தன்னை அர்ப்பணித்த ஒரு கலைஞராவார். 1971ம் ஆண்டிலிருந்து வைத்தியத்தினையும், சோதிடத்தினையும் கற்று மக்களுக்கு சேவையாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

1996ம் ஆண்டு இலங்கை அரசு பறைமேளக்கூத்துக்காக கலாபூசணம் விருது வழங்கி கௌரவித்தது. அதன் பின்பு 1998 ம் ஆண்டு மண்முனை தென் எருவில் பிரதேச செயலகமும் பறை மேளக்கூத்துக்காக கலைஞரை கௌரவித்து பெருமை கொண்டது. பறை மேளக்கூத்துக்காக முதன் முதல் விருது பெற்றவரும், கௌரவிக்கப் பட்டவரும் கலாபூசணம் வையன் ஆனைக்குட்டி என்பது முக்கியமானதாகும்

மேற்குறிப்பிட்ட தகவல்கள் வையன் ஆனைக்கட்டி அவர்களைப் பற்றி அறிந்து கொள்ள உதவுகின்ற ஒரு மேம்போக்கான புறபிம்பமேயாகும். இவற்றினூடாக அவரையும் அவருடைய முக்கியத்துவத்தினையும் முழுமையாக விளங்கி கொள்ளமுடியாது. அவரை அவருடைய சமூகப் பின்புலத்தோடும், ஈழத்து சமூக அரசியல் நிலமையினூடும் வைத்து நோக்குகின்றபோதே முழுமையாக விளங்கிக் கொள்ள முடியும்.

வையன் ஆனைக்குட்டி அவர்கள் அவருடைய சமூகத்தை சாராதவர்களுக்கு ஒரு கலைஞராகவே தெரிய அவருடைய பறையர் சமூகத்துக்கு மூப்பனாகவும் கலைஞராகவும் இருக்கின்றார். 'மூபபன்' என்பது பறையர் சமூகத்துக்கு தலைமை வகிக்கும் தலைவரையே குறிப்பதாகும் தனது சமூகப்பிரச்சினைகளை தீர்த்துவைப்பதுடன் அச்ச மூகத்தின் நிர்வாக அதிகாரியாகவும் தொழிற்படுதல் இவருடைய கடமை யாகும். மூப்பனுடைய ஆலோசனைகளையும். வழிகாட்டல்களையும் சமூக உறுப்பினர்கள் மீறி நடப்பது முறையல்ல.

இந்தவகையான சமூக அமைப்பும் அதன் இயங்குமுறையும் பூர்வீக

சமூகத்தின் தொடர்ச்சியின் ஒரு அடையாளமாகும். பேராசிரியர் சி. மௌனகுரு அவர்கள் "சங்ககால பறையர், கோடியர், ஆகியோரை மட்டக்களப்பு பறையரும் நினைவூட்டுகின்றனர் "என்பார். அவர்களுடைய இந்த புராதன தன்மையினை அவர்களுடைய நிகழ்த்து கலை வடிவமான பறைமேளக்கூத்தும் வெளிப்படுத்துகின்றது. அது வடமோடி, தென்மோடி போன்ற கூத்துக்களைப்போல் கதை தழுவிவரும் ஆட்டமும் அல்ல அது சொர்ணாலி இசையை அடிப்படையாக்கொண்டு பறையில் பல்வேறு வகையான தாளங்களை அடித்து ஆடும் ஒரு நிருத்த நடனமேயாகும். இவ்வகையான நிருத்த நடனமும் பெருமளவுக்கு புராதன குடிகளிடையே அவதானிக்கக்கப்படக்கூடியது.

இவற்றை அடிப்படையாக்கொண்டு பார்க்கின்றபோது எப்படி சிங்கள மக்களுக்கு திசகாமி எனும் வேட்டுவத் தலைவன் பூர்வீக குடிகளின் சின்னமாக இருந்தாரோ அதேபோல் தமிழர்கள் வையன் ஆனைக்குட்டி அவர்களை தங்களுடைய பூர்வீகக்குடிகளின் சின்னமாக கொள்ளக்கூடிய அத்தனை சாத்தியப்பாடுகளும் அவருடைய சமூகத்துக்கும் அவருக்கும் இருக்கின்றது எனலாம். இவை சமூகவியல், மானிடவியல் நோக்கில் உன்னிப்பான ஆய்வுக்கு உட்படுத்தப்படும்போது ஈழத்தமிழர்கள் பற்றிய பல சுவையான வரலாற்றுண்மைகளை வெளிக்கொண்டுவர முடியும். இதற்கு அப்படையான மூலவளமாக இருக்கக்கூடியவர் வையன் ஆனைக்குட்டி அவர்களேயாகும்.

பேராசிரியர் சு. வித்தியானந்தன் கூத்து புத்தாக்க முயற்சிகளில் ஆய்வை மேற்கொண்டிருந்த காலப்பகுதிகளில் பறைமேளக்கூத்தின் புராதன தன்மையினை அடையாளம் கண்டு கோயில்களிலும், திருமணவீடுகளிலும், மரணவீடுகளிலும் மற்றும் பிற சமூக நிகழ்ச்சிகளிலும் நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருந்த பறைமேளக் கூத்தை 1960ம் ஆண்டு பேராதனைப்பல்கலைக்கழகத்தில் ஆனைக்குட்டி அவர்களின் ஒத்துழைப்புடன் முதல் முறையாக மேடையேற்றினார். இதன்மூலம் சிங்கள புத்திஜீவிகளும், மாணவர்களும், தமிழர்களின் புராதன பாரம்பரிய அரங்கவடிவம் ஒன்றினை உணர்ந்துகொள்ள வாய்ப்பேற்பட்டது.

கிழக்குப் பல்கலைக்ழகத்தினால் 1998ம், 1999ம் ஆண்டுகளில் முறையே ஐந்து, ஆறு நாட்கள் நடாத்தப்பட்ட உலக நாடகதின விழாக்களில் முதல் நிகழ்சசியாக ஆனைக்குட்டியவர்களின் பறைமேக் கூத்தினை அரங்கேற்றி இளைய சந்ததியினருக்கும் பறைமேளக்கூத்தின் கலைச்செழுமையினை அறிமுகப்படுத்தி பெருமை கொண்டது.

விமோசனா (கிழங்கிலங்கை அவைக்காற்றுக் கலைக்கழகம்) 1998ம் ஆண்டு தேவநாயகம் மண்டபத்தில் ஆனைக்குட்டியவர்களின் பறைமேளக்கூத்தை மேடையேற்றியது இதன் மூலம் பரதநாட்டியமும். கர்நாடக சங்கீதமும் பார்த்து கேட்டு பழக்கப்பட்டுப் போனவர்களுக்கு ஒரு

மாற்றுக்லை நிகழ்ச்சியை வழங்கிய பெருமையை விமோசனா பெற்றுக் கொண்டது.

மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் ஒரு கலை நிகழ்ச்சியாக மட்டுமின்றி தமிழர்களுடைய பூர்வீகத்தை அவர்களுக்கே மீண்டும் கையளிக்கின்ற ஒரு புத்துயிர்ப்பு முயற்சியாகவும் மேற்கொள்ளப்பட்டது எனக் கூறலாம். இந்த முயற்சிகளுக்கெல்லாம் அடிநாதமாக விளங்கியவர் ஆனைக்குட்டி அவர்களாகும்.

ஈழத்தமிழ் மக்களுடைய அடையாளச் சின்னமாகவும் பறைமேளக்கூத்து இருந்தபோதிலும், ஈழத்தமிழ் மக்களுடைய கூத்துக்கள் பற்றிப் பேசுகின்ற அனேகம்பேர் வடமோடி, தென்மோடி ,காத்தவராயன் கூத்து, கோவலன் கூத்து, காமன் கூத்து என அவ்வப் பிரதேசங்களில் உயர் சாதி எனக்கூறப்படும் சமூகத்தால் பேணப்படுகின்ற கலைவடிவங்களை மட்டுமே கவனத்தில் எடுக்கின்றனர். ஆனால் பறைமேளக்கூத்து அதனுடைய புராதன தன்மையில் ஏற்கனவே குறிப்பிட்ட கூத்துகளுக்கு முற்பட்டவையாகவும், கலைமுழுமையிலும் மற்றைய கூத்துக்களை விட எவ்விதத்திலும் குறைந்தவையுமல்ல ஆனால் எமது சமூகம்

இவற்றைப் பாராமல் அது எந்தச் சாதியால் ஆடப்படுகின்றது என்பதையே பார்க்கின்றது. அதுமட்டுமின்றி தாம் ஆடும் கூத்துக்களை தலித்துக்கள் ஆடக்கூடாதெனவும் தடைவிதிக்கின்றது. இதனால் தமிழ் மக்கள் சம்பந்தமான கலை முயற்சிகளும். அவற்றை வளர்த்த பேணிய கலைஞர்களும் மண்தோண்டிப் புதைக்கப்படுகின்றார்கள். அனைத்து வெகுஜன ஊடகங்களையும் தன்னகத்தே கொண்டுள்ள உயர்சாதி கலைக்கான வரையறைகளையும், நியமங்களையும் தனக்கு சார்பாக உருவாக்கிக் கொள்வதுடன் தலித்மக்களின் கலைகள் காட்டுமிராண்டித்தனமானது என கட்டமைத்துத் தாக்குகின்றது. இதனூ டாக தனது இருப்பையும் தொடர்ச்சியையும் பாதுகாத்துக் கொள் கின்றது.

இவ்வாறு உயர்சாதி எனப்படும் சாதிகள் நிறுவனரீதியாக பல வழிகளிலும் திட்டமிட்டும், திட்டமிட்டு செயற்பட்டதன் காரணத்தினால் இயல்பானது என மாறிப்போன கற்பிதம் காரணமான நடத்தையினாலும் தலித்மக்களின் கலைவடிவங்கள் அழிக்கப்பட்டுக் கொணடு வரும் சூழ்நிலையில் அந்த தலித் சமூகத்தில் இருந்து நாளாந்த உணவுக்கே கஷ்டப்படுகின்ற ஒரு கலைஞன் எந்தவித அரசியல், பொருளாதார, சமூக செல்வாக்கு மின்றி தனது கலைக்காகவே விருதுவழங்கி கௌரவிக்கப்படுகின்றார் என்பது அவருடைய கலைமேதா விலாசத்தினையே எடுத்துக்காட்டுகின்றது.

# மந்திரச் சேவல்கள்.., விலங்குகள்..., மிருகங்கள்...

-அம்ரிதா ஏயெம்-

மண் வாரி இறைக்கப்பட்டு புழுதி பறந்து கொண்டிருந்தது. இந்தப் புழுதிகள் எங்கு போய்ப் படியப் போகிறதோ?. மண் அள்ளிப் போடல் நடந்துகொண்டிருந்தது. அந்தப் பெரிய மரத்தின் மறைவிலிருந்துதான் கட்டிகளாயும் மண்களாயும், புழுதியாயும், மண் அள்ளிப் போடல் நடந்து கொண்டிருந்தது. நிலம் கீறும் சத்தம் கேட்டது. என்ன நடக்கிறது? எது நிலம் கீறி மண் அள்ளிப் போடுகிறது? என்பதை என்னால் யூகிக்க முடியவில்லை. கொஞ்ச நேரத்திற்கு பிறகு சாமரப் பருமன் இறகு ஒன்று தெரிய ஆரம்பித்து, எனக்கு ஆச்சரியத்தையும் பயத்தையும் உண்டாக்கி, காட்சி முழுமையாகியது. நானோ என்னை மறைக்கக்கூடிய ஒரு மரத்தின் மறைவிலிருந்து ஒழிந்து பார்த்துக் கொண்டிருந்தபோதுதான் காட்சி முழுமையாகியது. ஒரு பெரிய ஆறு அடி உயரமுள்ள சேவல். சிவப்பும் மஞ்சளும், கறுப்பும் கலந்த நெருப்புக் கண் கொண்ட சேவல், நிலம் கீறி மண் அள்ளிப் போட்டுக் கொண்டிருந்தது. இந்த மகா பெரிய சேவலைப் பார்த்ததும் எனக்குப் பயம் தொற்றிக்கொண்டது. அதன் ஆபத்து ஏற்படுத்தும் வீச்செல்லைக்கு அப்பால் நான் ஒழிந்து பார்த்துக் கொண்டிருந்தபடியாலும், நான் காண்பது கனவென்றபடியாலும் எனக்கு பயம் வரவில்லை. அந்த நாள் முதற் கொண்டு இந்தநாள் வரைக்கும் கனவு கலரா? அல்லது கறுப்பு வெள்ளையா? விவாதம் போய்க் கொண்டிருக்கின்றது. நாளை கனவு கலைந்து காலை விழித்தவுடன் கனவு கலர் என்று புறூஃப் பண்ண வேண்டும் என்று கனவிலேயே நினைக்கிறேன். நினைத்துவிட்டு, நிகழ்கால நனவிலேயே நான் கடந்த கால நனவுகளை தொடர்புபடுத்துகிறேனே, அட நான் என்ன பெரிய புத்தி ஜீவியாக இருக்க வேண்டும்? என என்னை எண்ணி பீற்றிக் கொள்கிறேன். ஆனால் விடிந்தால்தான் தெரியும் அது பீற்றலா அல்லது பிதற்றலா என்று.

இப்போது மரத்தில் கையை வைத்து மறைந்திருந்து சேவலை பார்க்கிறபோதுதான் இந்த மரம் பற்றிய எண்ணம் ஏற்படுகிறது. முதலைத் தோல் பட்டை, சாதாரண அளவு மரம். இப்போது நான் மறைந்துகொண்டிருந்தது புல் என்று உணர ஆரம்பிக்கிறேன். மகா பெரிய சேவலைக் கண்டவுடன் அதனைச் சார்ந்து நான் மறைய உதவியது புல் என உணர்ந்தேன். வாழ்க்கையை இயக்குவதே சார்பியம். வாழ்க்கையின் ஊற்று, நம்பிக்கை மற்றும் இத்யாதி எல்லாமே சார்பியம். சிறியது எனப்படுவது பெரியதைச் சார்ந்து, குட்டையெனப்படுவது உயரத்தைச் சார்ந்து, திசையோ நிலையைச் சார்ந்து. ஒரு தடவை இடதெனப்படுவது, மறுதடவை வலதெனப்படும். துன்பம் என்பது இன்பத்தைச் சார்ந்து, துன்பத்துள் வாழ்தல் அல்லது வாழ்தலுக்குள் துன்பம் என்பது பற்றிய ஒப்பீடு இன்பத்துள் வாழ்ந்து / வாழ்தல் அல்லது வாழ்ந்ததற்குள் / வாழ்தலுக்குள் இன்பம்பற்றிய சார்பு. உலகமே சார்பும், ஒப்பும். ஐன்ஸ்ரைனுக்கு சாராதது ஒளிமட்டும். ஆனால் இது கூட இன்று சார்பு. ஒன்றைச் சார்ந்து ஒப்பிட ஒன்று இல்லாது அல்லது தெரியவராது இருக்கும் வரை வாழ்தல் பற்றிய பிரச்சினைகளின் தன்மை பழக்கமாகிவிடும். திடிரென

இப்போது, சேவல் என்னைப் பார்த்தது. என்னைக் கிலி பற்றியது. மெல்ல மெல்ல என்னை நோக்கி அடியெடுத்து வைத்தது. நானும் பின்னால் ஓடத் தொடங்க, அதுவும் துரத்த தொடங்குகிறது. பாய்ந்து என் மண்டையில் ஒரு கொத்து கொத்தினால் போதும், என் மூளை கலங்கி வெளியே வந்துவிடும். இப்போது சேவல் என்னை வேகமாக நெருங்கிவிட்டது. கடவுளிடம் உதவி கேட்கின்றேன். உதவி வந்துவிட்டதுதான் என்று நினைக்கின்றேன். "டொக்.. டொக்" என்று கதவு தட்டும் சத்தம் கேட்டது. கனவு கலைந்து எழும்பி, கதவைத் திறந்தேன். என்னை சேவலிடமிருந்து காப்பாற்றியது சசி என்று தெரிந்தது.

உடனே நேரத்தைப் பார்த்தேன். காலை 7.55 மணி. எட்டு மணிக்கு இரண்டு பேருக்கும் ஒரு வேலை இருந்தது. நேரந் தவறாமை முக்கியம். உடனே டெனிமை எடுத்து காலுக்குள் நுழைத்து, முன்னாலிருந்த சிங்கில், நின்ற நிலையில் முகம் கழுவிக் கொண்டிருந்தபோதுதான் பல் துலக்க வேண்டும் என்ற ஞாபகம் வந்தது. தூரிகையில் பசை வைத்து ஐந்தாறு தரம் இழுத்துவிட்டு, மேசையில் கிடந்த இரகுநாதையரின் திருக்கணித வாக்கிய பஞ்சாங்கத்தையும், அகராதியையும் பரர்த்துவிட்டு எனது பையுடன் மோட்டார் சைக்கிளில் நானும், சசியும் புறப்படத்தொடங்கும் போது நேரம் 8.00 மணி.

கனவு கலரா? கறுப்பு வெள்ளையா? மனித சஞ்சாரமற்ற மலையடிவார சமநிலத்தில் பரந்து கிடந்த, மஞ்சள் சூரியகாந்திப் பூந்தோட்டத்தையும், அதிலுள்ள மஞ்சள் அரக்கர்களையும், மஞ்சள் விமானத்தையும், நான் எனது ஆறாவது வயதில் கனவில் கண்டதாக நினைத்திருந்த கனவு எனக்கு இன்னும் ஞாபகம் இருக்கிறது கலர்களுடன். ஆனால் அம்புலிமாமா வாசித்துவிட்டு சாப்பிடாமல் படுத்ததன் விளைவாகவும் இருக்கலாம். மண்டை வலிக்கத் தொடங்கிவிட்டது. அறவே மண்டைக்குள் ஞாபகம் வரவில்லை. மிகவும் முயற்சி பண்ணுகிறேன். சேவல் பற்றிய உணர்வு இருந்தது. ஆனால் நிறம் பற்றிய உணர்வு இல்லை. ஆனால் மனம் மஞ்சள், சிவப்பு, கறுப்பு என்று பீற்றத் தொடங்குவது பொய்யெனப்பட்டது. பொய்மை என்ற தளத்தை உறுதியாக்கி அதன் மேல் சூனியத்தை வெளியாக்கி, வாழ்வமைத்து, கட்டடங்கள் கட்டி, பொருளாதாரம், அரசியல் உருவாக்கி அருவத்திற்கு உருவம் கொடுத்தால் சந்தோசப்படுவதுதானே பேதமை மனம்.

சாப்பாடு என்ன மாதிரி என்று சசி கேட்டான். நான் சாப்பிட வேண்டும் என்று பேசாமல் தலையாட்டினேன். சசி ஏதாவது வாங்கி வர அந்தச் சந்தைக்கருகில் சைக்கிளை விட்டிறங்கி போனான். அவன் ஏதோ பெட்டிக் கடைக்கு தூரத்தில் நுழைந்து கொண்டிருந்தபோது, ஒரு லொறி சந்தைக்கருகில் வந்து நின்றது. உடனே ஒரு நடுத்தர வயதுக்காரன் லொறிக்கருவில் வந்து நின்றான். அதனைத் தொடர்ந்து எங்கிருந்தெல்லாமோ ஏழெட்டுச் சிறுவர்கள் முதலாளீ...முதலாளி என்று கத்திக்கொண்டு வந்தார்கள். எல்லோரும் பத்து வயதுக்குள்தான் இருப்பார்கள் போல. இரண்டு பேரைத் தவிர, மற்றவர்கள் ஒருவருக்கும் சட்டையில்லை. மெலிந்த கறுத்த தேகம். எப்போதோ பாடசாலையில் கொடுத்த நீலக் களிசான்கள்,

சிலரிடத்தில் அர்ணாக்கொடியின் உபயத்தில் தொங்கிக்கொண்டிருந்தன. அப்போது முதலாளி என அழைக்கப்பட்டவன் ஒரு பையனின் தோளில் ஒரு மூடையை வைக்கிறான். அது உருளைக்கிழங்கு, 15 கிலோகிராம் நிறையுடைய மூடை என்று தெரிந்தது. இன்னும் ஒரு மூடை என்றான் சிறுவன். முதலாளி மீண்டும் வைத்தான். அந்த இரு மூடையுடனேயே அவன் துவளத் தொடங்கினான். இன்னும் ஒரு மூடைக்காக கெஞ்சலுடன் முதலாளியைப் பார்த்தான். முதலாளி மறுத்துவிட்டான். இதற்கிடையில் மற்றச் சிறுவர்களுக்கிடையில் , மூட்டை சுமக்க போட்டியேற்பட்டுவிட்டது. முதலாளி "எனக்கு.. எனக்கு... முதலாளி... நான்.. நான்.." எனச் சத்தங்கள் கேட்டுக் கொண்டிருக்க முதலாளி ஒவ்வொருவரின் தோள்களிலும், மூட்டைகளை வைக்கத் தொடங்கினான். முதலில் கிழங்கு மூட்டை வாங்கிய அந்தச் சிறிய நாட்டாண்மையை பார்க்கிறேன். 25 கிலோ பையன் 30 கிலோவை துவண்டு, துவண்டு தூக்கிக் கொண்டு சென்று கொண்டிருந்தான். முடிவுப் புள்ளியில் மூட்டையை போட்டுவிட்டு, மீண்டும் திரும்பிவந்து, மீண்டும் சுமப்பான் போல. இவர்களின் தாய், தந்தை, சகோதரர்கள் எல்லாம் எங்கே? இன்னும் ஐந்தாறு வருடங்களில் இவர்களிடம் சிறுபிள்ளைப் பருவம் தொலைய இவர்களும் தொலைந்து போவார்கள். பின் இவர்களின் அடுத்த வாரிசு மூட்டை சுமக்கும். மீண்டும் திரும்பிப் பார்க்கிறேன். இப்பொதும், துவண்டு, துவண்டு இந்தப் பையன்கள் மூட்டை தூக்கிக் கொண்டு போய்க் கொண்டிருந்தார்கள். அவர்கள் சுமப்பது மூட்டையல்ல. அவர்களின் வாழ்க்கையை. இப்போது மோட்டார் சைக்கிள், சந்தையிலிருந்து மேற்குப் பக்கமாக காடும் வயலும் சார்ந்த, இடம் நோக்கி போய்க் கொண்டிருந்தது. பாதையே பள்ளம் படுகுழி. ஒரு தடவை, நான் யானை எலும்புக்கூடு எடுத்துவர காட்டுக்கு ரெக்றரில் சென்றபோது முன் ரயர் கழண்டு பறந்ததும் இந்தப் பாதையில்தான்.

போவது வயலும் காடும் சார்ந்த இடங்கள் என்றாலும், இங்கேயும் மக்கள் வசிக்கின்றார்கள்தான். இப்போது வெயில் மெல்ல மெல்ல ஏறிக் கொண்டிருந்தது. பாதை நெடுக ஆங்காங்கே மக்கள் புள்ளியாய்த் தெரியத் தொடங்கினார்கள். ஒரு பெண், தலையில் பெரிய சுமையுடன், அந்தப் பாதையில் வயிறு பெருத்து வந்து கொண்டிருந்தாள். கிட்ட வந்தவுடன் அவள் கர்ப்பஸ்த்திரீ என்று தெரிந்தது. வயிறு வெள்ளையும் , நீலமும் பாரித்த மாதிரி இருந்தது. எப்படியோ இன்னும் இரு மாதத்தில் பிள்ளை கிடைத்துவிடும். வயிறு கொஞ்சம் பெரிதாகத்தான் இருந்தது. இரட்டைப் பிள்ளை என்றால் ஒரு கொடியை இருவருமா? அல்லது இருவரும் இரு கொடிகளையா பகிர்ந்து கொள்வார்கள் ஏன்று தெரியவில்லை. இந்த வெயிலில் இப்படி வயிற்றிலும், தலையிலும் சுமந்து கொண்டு..., மனதில் இதைவிடப் பாரங்களும் இருந்தால், வயிற்றினதும், தலையினதும் பாரங்கள் ஒரு துரும்பாகும். சுமைகளுடன், அந்தப் பெண்ணின் நடை, நடைமுறைச் சாத்தியமா? தெரியவில்லை. ஆனால் உண்மை. கருவினிலே அடிபடத் தொடங்குவதால் அவர்களின் மக்கள் வீரர்களாகிறார்கள். யாராவது, தனியேயும், கூட்டமாகவும், அந்தப் பாதைகளில் நடந்து வரும்போது, கல், மண் ஏற்றிவரும் உழவு இயந்திரங்கள் அவர்களை ஏற்றிச் சென்று இறக்கிவிடுதல் ஒரு எழுதப்படாத கடமை.

ஒரு பையன் தன் தலையுயர சைக்கிளில் பின்பக்கமும், பின் ரயரின் இரு ஓரப் பக்கங்களிலும் மொத்தமாக பெரிய மூன்று கருங்கற்களை கட்டிக் கொண்டு.. இல்லை.. விறகு அடுக்கி கட்டிக் கொண்டு வந்து கொண்டிருந்தான். மிகவும் சிறிய வயது. காலில் செருப்பு இல்லை. சைக்கிளுக்கு கூட மிதியடிக் கட்டைகள் இல்லை. இந்தப் பாலை வனத்தில் இந்த வெறும் பாதத்தால் எப்படி அந்த இரும்புக் கம்பியை மிதித்து இந்தப் பாரத்தை இழுக்கிறானோ தெரியாது. பாதை பள்ளமும், படுகுழியும் ஆனபடியால், மோட்டார் சைக்கிள் அவனுக்கு அருகே வர, அவன் இறங்கி சைக்கிளை உருட்டத் தொடங்கினான். என் கடைசித் தம்பியின் வயதைவிட சின்ன வயது. மடித்துக் கட்டிய சாரன் விறகு பட்டு கிழிந்திருந்தது. முழங்காலுக்கு சற்று கீழே பின் பகுதியும், விறகு கிழிபட்டு, இரத்தம் கசிந்து கொண்டிருந்ததது. இது புதிய காயம் இல்லை என்று விளங்கியது. பழைய காயம் தொடர்ந்த தாக்கப் பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்தேன். ஆனால், இரத்தம், வலி பற்றிய பிரக்ஞையை முகத்திற் காட்டாமல், சைக்கிளை உருட்டிக் கொண்டிருந்தான். பெருங்குடல் சிறுகுடலைக் கவ்வ வலி பிறக்கும். அவ்வலியை விட இது என்ன பெரிதா? இந்த விறகு அடிமாட்டு விலைக்கு விலைபோய் எரிந்தால்தான், அவன் வீட்டு அடுப்பும் எரியுமாக்கும். அடுப்புடன் சிலவேளைகளில் மனமும்தான். இதே மாதிரி இன்னொருவன், தன் குடும்பத்தை மிதக்க வைக்க, இரு பக்கமும், தோணியின் கொல்லாவைக் கட்டிக் கொண்டு ஓடிக் கொண்டிருந்தான். இன்னொருவன் தன் குடுமபத்திற்கு பசியிலிருந்து வேலி கட்ட காட்டுக் கம்புகளை கட்டி ஓடிக் கொண்டிருந்தான்.

எங்கே எந்தளவு ஆழம் என்பது பற்றிய பயத்துடன் வேகமாக மணலாற்றை ஆழங்குறைந்த பகுதியூ ாக க ந்தோம். அப்போது ஆற்றுக்குள் எங்களுக்கு நேரே அந்த ஆழம் குறைந்த பகுதியால், ஒரு பெண் தன் கைக்குழந்தையுடன் வருவது தெரிந்தது. ஆற்றைக் கடத்தல் நடந்து கொண்டிருந்தது. இரு மாதங்களுக்கு முன் இப்படி ஆற்றைக் கடத்தலில் ஒரு தாயும் பிள்ளையும் மடுவிற்குள் அகப்பட்டு இறந்து போனது எனக்கு இப்போது ஞாபகம் வருகிறது. வெயில், கைக்குழந்தை, தாய், ஆறு, ஆழம் எனக்கு வியப்பாகவும் புதுமையாகவும் இருந்தது.

உடைந்த பிரமாண்டமான சிவப்பு பாலத்தின் கீழால், தாண்டி, புதைகின்ற களிபாதை தாண்டி, குறுக்குப் பாதையில் வேறொரு பாலத்தடி வந்தோம். மோட்டார் சைக்கிளை நிறுத்தி, றௌசரை மடித்து விட்டேன். பாலத்தின் கீழ் நீர் வடிந்தோடிக்கொண்டிருந்தது. பத்து அடிக்கு கீழிருந்த பாலத்தின் கீழ் மெல்ல இறங்கத் தொடங்கினோம். நீர் வடிந்தோடிக் கொண்டிருந்தது என்றாலும் அவ்வளவு வேகமில்லை. நான் முதலில் நீருக்குள் அடியெடுத்து வைத்தேன். கால் சேற்றில் புதையத் தொடங்கியது. சசி கவனம் என்றான். இப்போது நீர் வழிந்தோடும் மதகின் கட்டிலிருந்து ஆற்றிற்குள் இறங்கிவிட்டேன் சசியும்தான். இடுப்பு பிடித்த தண்ணீர். "சசி எங்கே முதலை என்றேன். "அந்தப் பக்கம்தான் இருக்க வேணும் என்று ஒரு திசையைச் சுட்டிக் காட்டினான். இருவரும் சேற்றுக்குள் புதைந்து முதலையை தேடி அந்தப் பக்கம் போய்ப் பார்த்தோம். காணவில்லை. அந்த

இடத்தில் கிடந்த, நேற்று சூடுபட்டு இறந்த ஆறரையடி முதலை எங்கே? இங்கேதானே கிடக்க வேண்டும். சசியும் நானும் ஆளுக்கொரு பக்கம் தேடினோம். முதலை எங்கேயும் இல்லை. ஒரு வேளை , வெள்ளம் அடித்துச் சென்றுவிட்டதோ? அல்லது ஆற்றில் நீர்மட்டம் உயர்ந்து பிரப்பம் காட்டுக்குள் முதலையை அடித்துசென்றுவிட்டதோ?. நானும் சசியும் பிரப்பம் கிளைகளை பிரித்து உட்செல்ல முயன்றோம். ஆனால் முடியவில்லை. கையில் முட்கள் தைக்கத் தொடங்கியது. முடியவில்லை. முயற்சியைக் கைவிட்டோம். முட்கள் தைக்காமலிருந்தால், உட்சென்றிருப்போம். ஒரு வேளை முதலை அங்கேயும் இல்லாமலிருந்தால், முட்கள் தைத்திருக்கக்கூடாதுபோல இருக்கலாம். ஏனெனில் உள்ளே சென்றது அநாவசியம் எனக் கருதுவோம் என்றபடியால்.

திடிரென பாலத்தின் மேல், ஒரு கறுத்த, மெல்லிய, நீல களிசான் பையன் சிரிதத்துக்கொண்டே தேடுவது என்ன என்று கேட்டான். முதலையை என்றேன். "காலையில அங்கதான் படுத்தது, அப்ப வெறெங்காவது போயிருக்கும்" என்றான். என்ன.. நேற்றுச் சுட்ட ஆறரையடி முதலை எப்படிப் படுக்கும் என்றேன். அண்ணன் நீங்க நிக்கிறது முதல பாளியிலதான் என்றான். உடனே முதுகுப் பக்கம் இருந்த சிறுநீரக மேற்பட்டை, அட்ரீனலின் சுரந்து, இதயத் துடிப்பை கூட்டி, சசி லெற்ஸ் மூவ் என்று என்னை கத்த வைத்து, வேகமாக இருவரையும் நாகமரம் இருந்த கரைநோக்கி கரையேற வைத்தது. பாலப் பையனை பார்த்தேன். மறைந்துவிட்டான். பழப் பரிட்சை வைக்க வந்த தேவகுமாரன் போல் தோன்றி சிரித்து மறைந்து விட்டான். கெம்பஸ் மியுசியத்திற்கு ஒரு முதலை மிஸ் பண்ணிவிட்டது கொஞ்சம் கவலையாகத்தான் இருந்தது. நேற்றிருந்த காட்சி நிகழ்காலத்துடன் முறுகித் திரிந்து,பொய்யாகி, எதிர்காலத்துள் சென்றுவிட்டது. யதார்த்தமும், அயதார்த்தமும் சண்டையிட்டு எதிர்காலத்தை துரத்திச் சென்று கொடியாய் என் என் காலைச் சுற்றிப் படர்ந்தன. கொடியை விலக்கி தூரே எறிந்த போதுதான் பெருமூச்சு வந்தது சிறுமூச்சின் ஒலியைவிட சத்தமாக.

வேகமாக கரையேறி, நாக மரம் பிடித்து தலை நிமிர்கிறேன். அது கவிதைச் சூழல். சிறுபிள்ளையின் வயிற்றில் வாயால் ஊத, பிள்ளையின் வயிற்றுத் தசையும், எங்களின் கன்னத் தசையும் அலையியக்கமாக மாறி மாறி காற்றினால் ஏறியிறங்குவது போல வயலிலிருந்த நெற் புற்களும், அப்போது கேட்கும் சிறுபிள்ளையின் சிரிப்பு போல், வாய்க்கால் நீரின் ஓட்ட ஓசையும், அதனால் கிடைக்கும் சந்தோசம் போல் தென்றலும் இருந்து சூழலை இனிமையாக்கின.

"தம்பி இது பாளி மடு ஆறு" என்றுசொல்லி ஒரு முதியவர் நிறைய முதலைப் பாளிகளை காட்டினார். ஒரு நாளைக்கு நீ முதலை தேடி முதலைப் பாளிக்குள்ளேயே இறங்குவாய் "என்று எனது ஆசிரியர் அடிக்கடி சொல்வதை நினைக்க எனக்கு சிரிப்பு வந்தது. இதை சசியிடம் பகிர்ந்தேன். "நாசமத்துப் போவான் இடியுழுந்து போவான், கண்ணத் திண்டிருவான் "என்று சத்தம் போட்டு, மரியாதை இராமனிடம் நீதிகேட்டு வருவதுபோல் எங்களிடம் ஒரு பெண் வந்தாள். அவளாகவே கதைக்கத்

தொடங்கினாள். தன்னுடைய சேவல் கோழிகளை கூட்டுடன் திருடன் திருடர்கள் தூக்கிக்கொண்டு போய்விட்டார்களாம். திருடர்களை யாரென்று கண்டு பிடிப்பாளாம். ஏனென்றால் திருடர்களின் காலடி மண்ணை பத்திரப்படுத்தி வைத்திருக்கிறாளாம். எங்களையும் வந்து பார்க்கச் சொன்னாள். இரண்டு மூன்று காலடிகளைக் காட்டி, பனை ஓலைப் பெட்டியால் மூடத் தொடங்கினாள். அங்கேயும், அங்கேயும் காலடிகளிலிருந்து மண்களை கைபடாதவாறு வெள்ளைச் சீலைக்குள் அள்ளத் தொடங்கினாள். அந்த ,மண்ணை ஐயரிடம் கொண்டு போனால், ஐயர் சூனியம் செய்வாராம். உடனே (திருடர்கள்) திருடன் இறந்து விடுவானாம். அதைவைத்து திருடர்கள் யாரென்று கண்டுபிடித்து விடலாமாம். எனக்கு வியப்பாகவும், மலைப்பாகவும் இருந்தது. அப்போது முதியவர், நாவல் மரத்திற்கு அடியிலிருந்த பற்றைக்குள்ளிருந்து சேவல்கள் இல்லாத கூட்டை மீட்டார். கோழிக் கூட்டைக் காண அவளுக்கு இன்னும் ஆத்திரம் வந்தது. இன்னும் ஏசத் தொடங்கினாள். ஆளரவம் குறைந்த இந்த கானகத்தில் இக் கோழிகள் இவளுக்கு பிடிமானமாக இருக்கலாம். அதுவே அவள் வாழ்தலுக்கான இருப்பையும் அர்த்தப்படுத்தலாம். "கோழிகளுக்கு எவ்வளவு வரும்" என்று கேட்டேன். எழுநூறு என்றாள். ஐயருக்கு நாநூறு, ஐநூறு அதை விட மேலயும் போகுமென்றாள். செலவு நன்மை பகுப்பாய்வை சொன்னேன். பழிவாங்க அடம்பிடித்தாள். என்ன! ஆடு காப்பணம், சுமை கூலி முக்காப் பணம் போல். சட்டி சுட்டு கைவிடும் வரை ஒன்றும் இங்கே பிரயோசனமில்லை. ஆற்றைப் பார்க்கிறேன் முதலைப் பாளி என்று தெரியாதவரை முதலையை நிம்மதியாக பாளிக்குள் தேடலாம். முதலையை நாமோ அல்லது நம்மை முதலையோ காணாத வரை. நனவுகளிலேயே காலொடிந்த சேவல்கள் என்னமாய் ஓடுகின்றன, சிறகொடிந்த சேவல்கள் என்னமாய் பறக்கின்றன. சொண்டுடைபட்ட சேவல்கள் என்னமாய் பொறுக்கிதின்னுகின்றன. தொண்டை நசிந்த சேவல்கள் என்னமாய் கூவுகின்றன. ஒடிந்ததற்கும், உடைந்ததற்கும், நசிந்ததற்கும் எதிராக ஏவாத மந்திரம். என்ன! மந்திரம். இந்த மந்திரம் பரா சைக்கொலஜியா அல்லது மெற்றாபிசிக்ஸா அல்லது இரண்டின் கலவையா? விஞ்ஞானத்தின் வியாபகம் மட்டுப்படுத்தப்பட்டது அவதானிக்க முடியாததை ஆராய முடியாததாலாகும். அவதானிக்க முடிந்த சேவல்களையாவது ஆராய்ந்து கிழித்துத்தான் போட்டார்கள். கழுதைகளைச் சுமக்கும் சுவர்ச் சித்திரப் புத்தகங்கள். வாந்திகள், மலங்கள், அழுக்குகள், விசம் கக்கும் சுயநலமிகள். அம்மா, கவனம் உங்கட இல்ல எங்கட யாரின்ட கால் மண், தவறுதலாக போகப் போகுது... என்றேன். அதை நான் நக்கலாக சொல்லவில்லை என்பதை அவள் புரிந்து கொண்டாதாக அவள் முகம் காட்டியது.

இடுப்பிலே குறுக்காக சேலை செருகி இப்போது ஒற்றையடிப் பாதையிலே மந்திரத்தை நோக்கி நடக்கத் தொடங்கினாள். இறகுகள் இல்லாத வாய் பேசாத கோழிகளுக்காக மரியாதை இராமன்கள் பாவம். மனம் இறுகத் தொடங்கியது. இதிலிருந்து தப்ப வேண்டும். கடவுளிடம் உதவி கேட்டுவிட்டு, சசியை அர்த்தபுஷ்டியுடன் பார்க்கின்றேன். "டொக்.. டொக்." என்று சத்தம் கேட்கத் தொடங்கியது.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 24 க்கான சரியான விடைகள்

இடமிருந்த வலம்

1. முன்னறிதெய்வம்
6 கத்தி
7. துரங்கவதனன்
10. அக்கா
11. நிடதம்
12. குங்கிலியம்
14. அளி
15. மம
16. கூகை
17. புலம்புதல்
19 புரண்டு
20. வில்லி

1. முத்துக்குளிப்பு
2. அங்காரகன்
3. னதிங்
4. தெய்வறியமம்
5. வசனம்
8. கதலிமலடு
9. தடம்
13. மல்லிகை
16. கூதல்
17. புண்
18 புவி

எமக்குக் கிடைத்த ஏராளமான விடைகளில் முழுக்க முழுக்க சரியான விடையை அனுப்பி 1வது பரிசான ரூபா 100/- ஐப் பெறுபவர்.

திரு. R. சயலொளிபவன
கிராம அலுவலர்
தன்னாமுனை

**ஒரு எழுத்துப் பிழையுடன் அனுப்பி 2ம், 3ம் பரிசைப் பெறுபவர்கள்**

**2ம் பரிசு ரூபா 75/-**

திரு. V. இளஞ்செழியன்
கிழக்கு பல்கலைக்கழம்
வந்தாறுமூலை.

3ம் பரிசு ரூபா 50/-

திருமதி மணிமேகலை வரதராஜன்
வாழைச்சேனை வீதி,
கல்குடா.

இவர்கள்
அனைவருக்கும் எமது பாரட்டுக்கள்.

---

## சில தத்துவங்கள்

(கும்பம் + தேங்காய்).

**கும்பம்**

| | | |
|---|---|---|
| குடம் | - | தசை |
| அதனுள் உள்ள நீர் | - | குருதி |
| அதனுள் உள்ள இரத்தினங்கள் | - | எலும்புகள் |
| குடத்தைச் சுற்றியுள்ள நூல் | - | நாடிகள் |
| செபிக்கப்படும் மந்திரம் | - | உயிர் |
| கூர்ச்சம் | - | தலைமயிர் |
| மாவிலை | - | சடை |
| தேங்காய் | - | தலை |
| வஸ்திரம் | - | தோல் |
| 2. தேங்காய் | | |
| புற ஓடு | - | உலகமாயை |
| உள்ளீடு | - | பரம்பொருள் |
| இளநீர் | - | திருவருள் |

# குறுக்கெழுத்துப் போட்டி இல :25

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | | 5 | 6 |
| 7 | | | ✿ | | ✿ | 8 | |
| 9 | | | 10 | | ✿ | ✿ | |
| | ✿ | 11 | | | ✿ | 12 | |
| 13 | 14 | | | | 15 | | |
| ✿ | 16 | | ✿ | 17 | | | |
| 18 | | ✿ | ✿ | 19 | | | ✿ |
| 20 | | | | | ✿ | 21 | |

பெயர் :....................................

..............................................

முகவரி :....................................

..............................................

..............................................

..............................................

கையொப்பம்

1ம் பரிசு : ரூபா 100/-
2ம் பரிசு : ரூபா 75/-
3ம் பரிசு : ரூபா 50/-

இப்பத்திரத்தில் நிரப்பி அனுப்பப்படும் விடைகள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும். முடிவுத் திகதி 30 - 10 - 2000

### இடமிருந்து வலம்

01. கெட்ட கிரகம்
07. தசாப்தம்
08. கணவனை இழந்தவள் 3ம் எழுத்தும் இருந்தால்.
09. கொன்றை - 1ம், 2ம் எழுத்துக்கள் மாறிவிட்டன.
11. சமைத்த உணவு தீய்ந்து போதல்
12. காற்றடிக்க உதவுவது மாறிக்கிடக்கிறது
13. சித்தர்கள் கையாண்டதாக கருதும் சிகிச்சை முறை
16. அழி
17. விஷயத்தொகுதி, சரித்திரம் நேர்மாறாக உள்ளது.
18 அடிக்க உதவும் மாறிவிட்டது
19. நிறம் ஆங்கிலத்தில் குழம்பிவிட்டது.
20. இந்தியாவில் பேசப்படும் ஒரு மொழி
21. தூதுவளை

### மேலிருந்து கீழ்

01. புடமிட்ட பொன்
02. கரத்தை (மனம் மொழி மெய்யில் மாசின்மை)
03. தட்டுப்பாட்டிற்கு இதுதான் காரணம்
04. கிராம்பிலிருந்து பெறப்படும் தைலம்
05. குரங்கு
06. விவாகத்தால் ஏற்படும் உறவு தலைகீழாக உள்ளது.
10. உலகம 2ம் எழுத்து மறைய குழம்பிவிட்டது.
12. தாமரை குழம்பிக்கிடக்கிறது.
14. கட்டட வேலை செய்பவன் 1ம்,2ம் எழுத்துக்கள் மாறிவிட்டன.
15. நடுக்கம்
18. குரைக்கிற நாய் இது செய்யாது (தலைகீழாக)

DEALERS IN :

Hardware, Sanitaryware, Water Pumps,
Hullers, Cements, Timber, Tiles,
Plywood, Fomica Sheets.

# LANKA HARDWARE STORES

*48, Bazaar Street,*
*Batticaloa.* ☎ - *065 - 22022*
FAX - *065 - 23878*

Branch :

## LANKA TIMBES STROES

*121 Main Street, Batticaloa.*

நல்வாழ்த்துக்கள் - வலம்புரி ரேடர்ஸ்

*எங்களிடம் சகலவிதமான*

- ★ சில்லறைப் பொருட்களையும்
- ★ பாடசாலை உபகரணங்களையும்

**நியாய விலையில் நிறைந்த தரத்துடன்**
**பெற்றுக்கொள்ளலாம்.**

# வலம்புரி ரேடர்ஸ்

*22, பசார் வீதி, மட்டக்களப்பு.*
☎ *22319*

உங்கள் திருப்தியே எங்கள் திருப்தி

# The Ultimate Success Scheme

Jaya Sri
ජය ශ්‍රී
SUCCESS SCHEME

From
people's Bank

**10 Colour TVs EVERY DAY**

**01 Car EVERY WEEK**

**01 House EVERY FORTNICHT**

**04 Millionaries EVERY MONTH**

For Further details talk to your nearest Bank manager today.

PEOPLE'S BANK
THE PULSE OF THE PEOPLE

PEOPLE'S BANK
40 YEARS
SERVING PEOPLE